237

37

சின்ன அர்ச்சுனன் சண்டை நாடகம்.

(புலந்திரன் தூது)

31 JUL 1946

மலர்மகன் பதிப்பு.

O-,892NVP3c
N46
104031

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

புலந்திரன் தூது என்னும் சின்ன அர்ச்சுனன் சண்டை நாடகம்

31 JUL 1946
MADRAS

இஃது

கூடலூர் தாலுக்கா குறத்தி கிராமத்திலிருக்கும்

நாராயணசாமி கவுண்டர் குமாரர்

நாகரத்தின கவுண்டராலும்

ஷ டி தாலுக்கா ஷ டி யூர்

வை. வீரப்படையாட்சியாராலும் இயற்றியது

ஷ டி தாலுக்கா ஷ டி யூர் இராமசாமி கவுண்டர் குமாரர்

பாலகிருஷ்ண கவுண்டரால் திருத்தப்பட்டு,

ஷ டி தாலுக்கா ஷ டி யூர்

பா. கோவிந்தசாமி செட்டியார்

கேட்டுக்கொண்டபடி

வை. வீரப்படையாட்சி அவர்களிடம்

சர்வ சுதந்தரம் பெற்று,

அமரம்பேடு.

இராஜரத்தின முதலியார்

மலர்மகள் விலாசம் பிரஸ்.

[ரிஜிஸ்டர் காபிரைட்] 1946 [விலை அணா 10

நெ. 23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

O-892NVP3,C
N46

TAMIL NADU ARCHIVES LIBRARY
104031
EGMORE, MADRAS-600 008

ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலமான அச்சுக்கூடத் ததிபர்கட்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில், ம-ா-ா-ஸ்ரீ, நா. நாகரத்தின கவுண்டராலும், வை. வீரப்படையாட்சியாராலும் இயற்றிய "புலந்திரன் தூது என்னும் சின்ன அர்ச்சுனன் சண்டை நாடகம்" ஆகிய இந்நூலை, திருத்துறையூருக்கு அடுத்த குறத்தி கிராமத்திலிருக்கும் வை. வீரப்படையாட்சி அவர்களிடம் சகல சுதந்தரமும் பெற்று அடியிற்கண்ட என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். இப்புத்தகத்தை மகாகனம் பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக்கிறேன். ஆகையால் இப்புத்தகத்தை என் னுத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு,

அ. இராஜரத்தின முதலியார்.

23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

சாற்றுகவிகள்

கூடலூர் தாலுக்கா குறத்திகிராமம் நாராயணசாமி கவுண்டர் குமாரர்

கந்தசாமி கவுண்டரால் இயற்றியது

பஞ்சாமிர்தம்தன்னை பட்சமாய்உண்டாற்போல
செஞ்சொல்புகழேந்தி சீர்கதைதன்னைக்கொண்டு
பஞ்சபாபம்துலைக்கும் பார்பெண்ணைநதிக்குதென்பால்
கொஞ்சுமாம்கிள்ளைநகர் கொறத்தியில்வாசரானோர்
புஞ்சொல்புலேந்திரன்தூது புகன்றனர்நடிப்பதற்கு
அஞ்சிடாஐவர்வம்சம் அருமைசின்னர்ச்சுனன்சண்டை
தஞ்சமாய்நாகரத்னம் தனயன்வீரப்பன்பாட
சஞ்சலமில்லாசம்புகோத்ர சார்பினிலுதித்தோர்தாமே.

கூடலூர் தாலுக்கா குறத்தி கிராமம் ஆ. கோவிந்தசாமி நாயகர் குமாரர்

அப்பாவு நாயகரால் இயற்றியது

புதன்குலத்தர்ச்சுனனும்சின்ன புகழேந்திபுலவர்காதை
அதன்மொழியைநாடகமாய் அன்புடனேநடிக்கமேலாய்
சுதன்நாகரத்தினராயன் சுகுணவீரப்பதாசன்
வதனமாம்சம்புகோத்ர வளவினிலுதித்தோர்மாதோ.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

புலந்திரன் தூது என்னும்

சின்ன அர்ச்சுனன் சண்டை நாடகம்

விநாயகர் துதி

சீர்பெரும்கைலைவாசன் சிவகாமியருளால்வந்த
பேர்பெரும்விக்கினேசர் பிரணவர்பாதம்போற்றி
பார்புகழ்புகழேந்திகாதை பண்புநாடகமாய்ப்பாட
ஏர்பெரும்கயமுகத்தோன் யிணையடிகாப்புதானே.

சரஸ்வதி துதி

பூவினிலமர்ந்தவேணி பிர்மனார்தேவிவாணி
வாவிசூழ்புவியிலுள்ளோர் வாக்கிலிருப்பவளேபோற்றி
நாவினால்புலேந்திரன்தூது நாடகம்பாடுதற்கு
தேவியேஎனைரக்ஷித்து திருமொழிதருவாய்போற்றி.

தருமர் கொலுவுக்கு வருகிற கவி

தீராதகடும்பகையே கொண்டசுயோதனன்
தீங்குகளே பலசமயம் செய்துவந்து
மாராத மலைபோன்ற பகடைதன்னில்
பரித்துவிட நாடுநகர் பரிவாரங்கள்
ஆராத மனக்களிப்பில் சகுனிவாக்கால்
ஆக்கினான் வனமீறூர் தன்மற்றொன்று
தாராத ராச்சியத்தை தானேபற்ற
தருமமே கொலுவாக வருகின்றாரே.

தருமர் தரு

தரணியில்புகழ்பெற்ற
தருமபூபதிமேவினார்
தருமபூபதிமேவினார்

தம்பிமார்களையுற்ற
உபலாபியம்தன்னில்

கிரணவடிவமின்ன
துரோணர்வீஷ்மர்சொற்படி

கீர்த்திப்பிரதாபனென்ன
துலைத்தோம்ஐக்யாதம்நாடி

சுருள் தந்திரமாகவே
தந்திடுமொழிபோல்

நந்தகோபாலன்
விந்தையாயிருந்தோம் த

பாவிதுரியன்செய்த
நாவதுவும்வல்லையே

படுமோசம்தன்னைசொல்ல
நாங்கள்படும்தொல்லையே

சுருள் நாட்டைபறித்துமே காட்டிற்கனுப்பியும்
தீட்டியகூர்வாள் வாட்டமாய்நின்றான் த

பந்துமித்திருடன் பலர்நிறைந்தகொலுவில்
பையல்துர்ச்சாதனனும் ஐயப்படவுமானோம்
சுருள் பங்கமும்பலவார் அங்குள்ளோரறிய
சங்கையில்லாமலே மங்கையைசெய்தான் த

கண்ணனருளே என்று எண்ணியிருந்தோம்நாங்கள்
மண்ணையளந்தோன்பாதம் மலரடியைத்துதித்து
சுருள் மாதுபாஞ்சாலியின் வாக்கியப்படியே
நீதில்லாதம்பிமார் சொற்படியாகுமே த

தருமர் கவி

நாட்டினில்பாகம்கேழ்க்க நாமுமேயிருப்பதாலே
மேட்டிமையுடையதம்பி மார்களேஒன்றுகேளீர்
கேட்டிடநமதுசொத்தை கிளம்பியேசெல்லவேண்டும்
கூட்டியேசெல்வதற்கு கோதையை அழைத்திடீரே.

வசனம்

கேளும் தம்பிமார்களே! சூதுபகடையாடி பாவியாகிய துரியன் சகுனியால் நாட்டை பறித்ததுமல்லாமல் துரோபதையை துர்ச்சாதனனால் துயிலுரிந்து பெரியோர்களால் 12-வருஷம் வனவாசம் ஓராண்டு ஐக்யாதவாசம் கழித்து உபலாபியம் வந்தமையால் நமது தேவியாகிய துரோபதையை அழைத்து வாருங்கள் தம்பிமார்களே. அப்போது துரோபதை சபைக்கு வருவது.

துரோபதை சபைக்கு வருகிற கவி

நாதருமழைத்தசேதி நங்கையும்கேழ்க்கவேண்டி
கோதியேமயிர்முடிக்கா கூந்தலையுடையமாது
காதினில்கம்மல்மின்ன கன்னிதுரோபதையாள்தானும்
ஓதிடசபையோர்முன்னே வுத்தமிவருகின்றாளே.

துரோபதை தரு

திங்கள்வதனம்போல எங்கும்புகழுடையாள்
துரோபதையம்மன்வந்தாள் மன்னரைக்காண
கங்குபட்டரும்நம்மை யிங்ஙனமழைத்தசேதி
மங்களமாகவே மாதுஅறியநீதி

சுருள் மங்கையாள்நல்ல இங்கிர்தமுடையாள்
தங்கிடும்அன்னப் பேடையின்நடையாள்
அண்ணல்கண்ணபிரானை அனுதினம்துதிப்பவள்
விண்ணோர்கள்தான்புகழும் விமலியானஒய்யாரி

சுருள் வித்தகனருளது நித்தமும்பெறுவாள்
சத்திசங்கரியாள் வுத்தமியானவள்

உருவமாறியேநாங்கள் ஒருவருஷம்கழித்தோம்
பெரியோர்வாக்குப்படியே பிரளாமலேநடந்தோம்

சுருள் பின்னமில்லாமலே பூமியைகேழ்க்க
இன்னமுமென்னமோ மன்னவர்வழக்கு

சொந்தமாவநாடதை துரியன்கொடாதேவிட்டால்
நந்தகோபாலன்தன்னால் கூந்தல்முடிப்பேன்பின்னால்

சுருள் நங்கையாள்சொல்மொழி யிங்கிர்தமாக
பங்கமாய்துரியனும் பாவியும்நோக

துரோபதை தரு

வேலுசண்முகனே என்றமெட்டு

மன்னவா சரணம் மாதுயித்தருணம்
மாநிலந்தனிலே வருந்துயர்
வேயகற்றிட தானழைத்ததை
மன்னவா கூறும் மனமகிழ்ந்திடநீரும்

தருமர் தரு மேற்படி மெட்டு

சேல்விழிவாழி ஜெகம்தனிலேநீடூழி
சேவடிதனி லேபணிந்ததால்
மாநிலந்தனில் மகிழ்ந்துவாழ்குவாய்
மங்கையேகேளும் மனமகிழ்ந்திடநாளும்

துரோபதை கொச்சகம்

சூதாடஐவர்தம்மை சூட்சங்கள்செய்தபாவி
தீதொன்றுமில்லாமல் தேசத்தைகொடுப்பானோ
வாதாடிவழக்குரைத்து வஞ்சனைகள்செய்வானோ
ஏதொன்றும்யானறியேன் யீசனருள்எப்படியோ.

தருமர் கொச்சகம்

வஞ்சகம்செய்தானென்று வாதனைப்படவேண்டாம்
பஞ்சவர்கள்துலைந்தாரென்று பாவியும்எண்ணிவிட்டான்
கொஞ்சும்கிளிமொழியே கோரிக்கையீடேற
ரஞ்சிதமேவுந்தனுக்கு நாயகியேசொல்லுகிறேன்.

துரோபதை தரு

விள்ளுவேனென்றுசொன்ன நாதாநாதா
விவகரிக்கவேண்டுமிப்போ போதாபோதா

தொல்புவிதன்னிலே அல்லல்படவுமானோம்
பொல்லாதகஷ்டத்தினால் பெருந்துயரடையலானோம்
சுருள் பிரியமுடனதாய் மாலையுமிட்டேன்
அரிவையாள்கானகம் அலைந்துமேகெட்டேன்

தருமர் தரு

அடைந்தகஷ்டமதனை தள்ளு
அதிர்ஷ்டம்வருவதைவுட் கொள்ளு
கடந்தோம்பதின்மூன்றாண்டு கண்ணேவிசனம்வேண்டாம்
நடந்தேஉபலாபுரி நகரதைநாமும்வந்தோம்
சுருள் நாடதைகேழ்க்க வாடுதேமனது
தேடியேதூது யாரையனுப்புவேன் அ

துரோபதை தரு

கண்ணனருளிருக்க நாதா நீரும்
கவலைகொண்டிடவேண்டாம் நீதா
எண்ணுதஎண்ணமெல்லாம் எண்ணியேன்தவிக்கிறீர்
அண்ணரவரிருக்க என்னகுறைநமக்கு
சுருள் அன்புடன்தூது தென்புடன்செல்வார்
இன்பமதாகவே நம்பிதுதிப்போம் க

தருமர் தரு

தூதுக்குபோகச்சொன்னால் பெண்ணே அந்த
சூதரென்னசொல்வாரோ கண்ணே
பேதமைபுத்திதன்னால் பினத்துகிறாயேமுன்னால்
காதகதுரியனாலே கலங்குதேமனம்பின்னாள்
சுருள் கண்ணன்கண்ணனென காலமும்நம்பி
எண்ணியழைத்தால் என்னசொல்வாரோ தூ

துரோபதை கவி

கலங்கிநீர்தவிக்கவேண்டாம் கர்த்தரேஎனதுநாதா
மலையதைகுடையாய்கொண்ட மாயவரிருக்கும்போது
துலங்கிடும்அஸ்தினாபுரத்தை துரிதமாயாள்வதற்கு
நலங்கிடுமனதைதேற்றி நயாஜலம்தனைதுதிப்போம்.

தருமர் தரு

வந்தருள்ராதாரமணா நீயேநாரணா
வந்தருள்ராதாரமணா
சந்ததமுந்தனின் செந்தாளைபோற்றினேன்
இந்தவேளைபஞ்சவர் ஏற்றித்துதிகள்செய்தோம்

சுருள் ஸ்ரீ அரிதேவா யிப்போதேவருவாய்
ஸ்ரீ தராவரமும் சீக்கிரம்தருவாய் வ

பொது வசனம்

இந்தப் பிரகாரமாக தருமரும் தம்பிமார்களும் துரோபதை யம்மனும் துரியன் கட்டளைப்படி பதின்மூன்று வருஷம் துலைத்து விராடராஜன் மகளான உத்திரிக்கு சீதனமாகவிட்ட உபலாவிய பட்டணம சோந்து துரியோதனரிடம் பாகம் கேழ்க்கும்பொருட் டாய் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை துதிசெய்ய அப்போது பகவான் கொலுவாக வருகிருர்.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி வருகிற கவி

சராசரம்அகிலம்பூமி தன்னையேகும்படிவைத்தோன்
பராபரவஸ்துவான பாலகோபாலநாதன்
தராதலம்புகழ்படைத்த தருமரும்என்னைதுதிக்க
வராகவதாரம்கொண்ட வண்ணனும் வருகின்ருரே.

கிருஷ்ணன் தரு

கரியமால்வருதராயன் காகுத்தன்ஐவர்க்கண்பன்
கண்ணன்கொலுவதாகினேன் கோபாலகிருஷ்ணர்
கண்ணன்கொலுவதாகினேன்

பரிவாமுதல்யுகத்தில் துரிதமாய்சோமுகனை
சரியாமகூமதாகி சங்கரித்தேனவனை
சங்காழிபிடித்தேன் சகல சூரரையும்வடித்தேன்

சுருள் சலத்தினில்ஒளித்த வேதத்தைபரித்தேன்
தலமதில்பிர்ம தேவனுக்களித்தேன் கரி

வாருதியிலமிர்தம் தேவர்கடையும்போது
வந்தேன்கூர்மவதாரம் கொண்டு-நான்
மந்தரகிரியைத் தாங்கிநின்று
வாசுகிவிஷம்கக்க வமரர்கண்டுநடுங்க
வாடிடசென்றேன் அரக்கரிடம் வஞ்சியாநின்றேன்

சுருள் வண்டனிரணியனை மார்பையும்பிளந்தேன்
தொண்டனைபிரக லாதனைக்கார்த்தேன் கரி

எண்ணைந்துகால்சிரசோன் பெண்ணையெடுத்ததினுல்
மண்ணிலலைந்துமிகசென்றேன் அரக்காதன்னை
விண்ணுள்ளோர்தான் மகிழக்கொன்றேன்
யெண்ணுவிபீஷணர்க்கு நன்ருய்பட்டமளித்தேன்

ீயகியேவந்தேன் மாபெலிமுன்னிலே வாமனனுகநின்றேன்
சுருள் யாசகமூன்றடி தானமும்கேட்டேன்
பாசமாகார்த்திகை பண்டிகையளித்தேன் கரி

பஞ்சவர்கள்நம்மை தஞ்சமென்றழைக்குறா்
வஞ்சகத்துரியனிடம்செல்ல நாடதைகேட்க
நெஞ்சினில்நினைத்தார் தினம்மெல்ல
செஞ்சொலுடையநாக ரத்தினம்கவியைப்பாட
செல்வனுயுதித்தேன் நாராயணசாமி கலிதனைதீர்த்தேன்

சுருள் சீர்பெருங்குறத்தி மாநகர்வாசன்
பேர்பெரும்சம்புரிஷி கோத்திரதாசன் கரி

தருமர் சரண தரு

துவாரகைவாசரான கண்ணுவண்ணு
துதித்ததேனுந்தன்மலரடியை வண்ணுகண்ணு

கிருஷ்ணன் தரு

தாள்தனைப்பணிந்ததர்மா வாழிவாழி
தரணியில்செங்கோல்பெறுவா நீடூழிவாழி

துரோபதை தரு

தண்டுளபம்தான்தரித்த அண்ணு அண்ணு
தங்கையாள்பணிந்துநின்றேன் அண்ணு அண்ணு

கிருஷ்ணன் தரு

குருகுலத்தில்மாலையிட்ட தங்கா தங்கா
குவலயத்தில்வாழ்ந்திருப்பாய் தங்கா தங்கா

தருமர் கவி

தாமோதராமுகுந்தா தருமனும் ஒருவிண்ணப்பம்
ஆமோதிராபி ஐவர்கள்பட்டகஷ்டம்
மாமோசம்பகடைதன்னை மாதவாதெரிந்திருந்தும்
போமோயிக்காலத்திற்கு புண்ணியாவிதம்சொல்வீரே.

கிருஷ்ணன் கவி

முரசுகேதனனேகேளாய் மொழிகுவேன்வார்த்தைஒன்று
அரசதைஒப்புக்கொள்ள ஆலோசனைஒன்றுசொல்வேன்
சரசமாய்உலூகராலே சங்கதிதெரிந்துக்கொண்டேன்
பரவசமுடனேயானும் பதில்மொழிகூறுவேனே.

கிருஷ்ணன் வசனம்

கேளும் தர்மபூபனே சிறந்த பெரியோரான உலுகமுனிவரை நேற்றையதினம் துரியனிடம் உங்கள் பாகத்தைக்கேட்க அனுப்பி வைத்தோம் அவ்வாறே உலுகமுனிவர் சென்று துரியனே பாகம் கேட்க பாண்டவர்களுக்கு பாகம் கொடுக்கேனென்று முனிவரை தூஷித்துவிட அதற்கு உலுகமுனிவர்க்கு கோபம்பிறந்து பாண்டவாளே இந்த அஸ்தினுபுரியை ஆளப்போகிருரென்று சாபம் தந்து வந்துவிட்டார். ஆதலால் நீங்கள் சந்தேகப்படவேண்டாம் தர்ம பூபனே! அர்ச்சுனனை அழைப்பித்தால் யோசனை சொல்கிறேன் சிக்கிரம் அர்ச்சுனனை அழைத்துவாரும்.

அர்ச்சுனன் வருகிற கவி

வில்லிசைவீரனெனும் பேரும்பெற்றேன்
விலாடனிடராச்சியத்தில் நடனமுற்ருேன்
கல்வியது துரோணரிடம் தானேகற்றேன்
கன்னுகளைசென்றெதிர் திருப்பிவந்தேன்
அல்லலில்லாமைத்துனரும் அழைக்கக்கேட்டு
அருள்தருகும் நாரணனேமனதிலெண்ணி
செல்வரெனும்பஞ்சவரில் நடுவோனுன
செயவீரகிரீடியும்நான் வருகின்றேனே.

அர்ச்சுனன் தரு

பாரினில்கீர்த்திபெற்றதீரன் நல்ல
பலகலைவேதசாஸ்திரம் கற்றேன்
பிலமுள்ளவில்லும் கைதனில்பெற்றேன்

பற்குணனென்றிடும் ஒய்யாரன்
கரியமுகில்வண்ணனே கனவிலும்மறவாசீலன்

சுருள் கச்சிதமாதர்கள் கவரியும்வீச
அச்சமில்லாதோழர் அருகினில்பேச பாரி

சித்திரமிகர்த்தமுகமாரன் வடிவம்தன்னில்
நித்தியசூரியன் ஒத்தவன்போலவே
பத்தரைமாத்தொளிர் பூத்ததுபோலவே
சுத்திலும்வீசும் சுடர்தீரன்

நத்திதஞ்சமென்றவர்க்கு சித்தமகிழச்செய்வேன்
சுருள் நாடியேவனவாசமும் செய்தேன்
பேடியென்றிட பேரையும் பெற்றேன் பாரி
பாவித்துரியன்செய்தமோசம் இப்போ
பலவிதமாகவே அலையுதேமனது

சிலையினலவனை சிதைக்குறேன் தீது
பற்றறுப்பேன் குலநாசம்

ஆவியிழக்கச்செய்வேன் அதிபெலக்கர்ணன் தன்னை
சுருள் அண்டகடாகமும் யெண்டிசையதிர
கண்டுகவுரவரை துண்டமாய்சிதற பாரி

திருத்துறையூருக்கடுத்தவாசன் கொறத்திநகர்
தேடியேயீசன் திருவருளுற்ருேன்
நாடியவயித்திலிங்க வாசனும்பெற்ருேன்
பாடினன்வீரப்ப னெனும்தாசன்

கருத்தில்காலகாலனை நிறுத்திதுதிக்கும்சீலன்
சுருள் கற்றபுலவோர் கழலடிபணிந்தான்
குற்றம் பொறுத்திட சிரமதுகுவிந்தான் பாரி

அர்ச்சுனன் தரு

(பாரத மாதா என்ற மெட்டு)

அருமையுள்ள மைத்துனரே அண்ணவுங்கள்திருவடிக்கு
சிறுவன்காண்டீபன்யானும் பெருமையுந்தன்தாள்பணிந்தேன்
உரைத்திடுவீரேஎந்தனை அழைத்ததைநீரே அரு

கிருஷ்ணன் தரு

கன்னல்மதனையொத்த காண்டீபாநீயும்வாழி
நன்மையுடனேதூது நமதுநாட்டிற்கேஅனுப்ப
நானேஅழைத்தேனேமனதில் நாட்டினேன்தானே கன்

அர்ச்சுனன் தரு

ஆரைஅனுப்புவதாய் ஆலோசனைமைத்துனரே
நேரமதாகாமுன்னும் நியமனங்கள்செய்தனுப்ப
நேர்த்தியாய்சொல்லும்யெனக்கு பூர்த்தியாய்விள்ளும் ஆ

கிருஷ்ணன் தரு

சொல்லுவேன்கேள்அர்ச்சுனா அல்லலடையவேண்டாம்
அல்லியின்மைந்தனான அருமைசுதன்புலேந்திரனை
அனுப்பிடநானேஇப்போது குறிப்பிடுவேனே சொ

அர்ச்சுனன் கவி

மதுரையையாளும்அல்லி மைந்தனும்புலேந்திரனை
சதுரங்கத்தோடுஆள சங்கரன்தனை துதித்து
பொதுநீதிபுரியப்போருள் போயினலனுப்பமாட்டாள்
அதுவிதம்தன்னைநீரும் அறிந்துமேகொள்ளுவீரே.

கிருஷ்ணன் கவி

அத்தையின்மக்களான ஐவரேசொல்லக்கேளும்
சத்துருவிடமேதூது சனுதியிலனுப்பவேண்டி
மெத்தவும் அல்லியர்க்கு மெலிந்துமேயிருப்பதாக
சித்தமாநிருபம் தன்னால் சீக்கிரம்வரச்செய்வீரே.

பொது வசனம்

இந்தப்பிரகாரம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் மதுராபுரி அல்லியர்க்கு நிருபம் எழுதும்படி யோசனை செய்து இருக்க அல்லியானவள் கொலுவுக்கு வருவது.

அல்லி வருகிற கவி

கதிரவனொளியைப்போல கனத்ததோர்மகுடம்பூண்டு
எதிரிகள்தனையடக்கி யிந்ததோர்மதுரைதன்னை
பதியெனசொக்கநாதர் பலத்தினாலாண்டுவந்தேன்
அதிரவேசேனைசூழ அல்லியும்வருகின்றாளே.

அல்லி தரு

திருமதுராபுரியில் அறுபதாயிரம்பேர்க்கும்
செல்வியாகவேயுதித்தேன் பாண்டியருக்கு
சேயிழையாள்கலிதீர்த்தேன்

அருள்தரும்சொக்கரை அன்பாகதினம்போற்றி
அதிவிதபவளச்சேனை அடிபணிந்துமேஏற்றி

சுருள் அந்திரதுந்துமி எங்குமுழங்கிட
சுந்திரமாகவே மந்திரிகூட திரு

வச்சிரவைடூரியங்கள் வர்ணபுசங்கள்மின்ன
கச்சையுடன்பதக்கம் காந்திமதியோமென்ன

சுருள் கங்கணகடகம் செங்கையிலங்கிட
சங்கையிலாமாதர் சாமரைபோட்டிட திரு

அல்லிமலர்தனிலே செல்வியாகவுதித்தேன்
கல்விசாஸ்திரம்தனில் நல்லவிதமறிந்தேன்

சுருள் கலங்கிடநீன்முகனை பிலங்கொண்டுஅடித்தேன்
தலமதில்கீர்த்திகள் நிலைமையாய்பெற்றேன் திரு

கடமைநான்குடன்யிரண்டில் திடமாஒன்றதைவாங்கி
இடரொன்றும்வாராமலே யிருந்தேஅரசுசெய்தேன்

சுருள் இச்செகம்தனில் மெச்சிபுகழ்ந்திட
உச்சிதசெங்கோல் உயர்வதாஓங்கிட திரு

அல்லி கவி

தாதியேசெங்கமலம் சொல்லக்கேளாய்
    தனியாகநித்திரையான் செய்யும்போது
நீதியாய்மைத்துனன்மார் கானகத்தில்
    நேர்மையாய்சோகமுற்று கிடப்பதாக
தூதாகஎன்னிடமே நிருபம்ஒன்று
    துலங்கிடவேகினவுதனில் கண்டேனம்மா
ஓதிடவேமைந்தனுக்கு உரைக்கவேண்டும்
    உத்தமியேபுலேந்திரனே அழைத்துவாராய்.

பொது வசனம்

இவ்விதமாக அல்லி கனவுகண்டு தாதியிடம் தெரிவித்து தன் குமாரனை புலேந்திரனே அழைக்கும்படி சொல்ல தாதிகள் ஓடி புலேந்திரனுக்குச் சொல்ல புலேந்திரன் கொலுவைநாடி வருகிறவிதங்காண்க.

புலந்திரன் வருகிற கவி

அன்னையுமழைத்தசேதி அன்புடனறியவேண்டி
தன்னிகரில்லாவீரன் தருமர்தன்குலம்விளங்க
நன்னயமுடையபார்த்தன் நற்குணசுதனுய்வந்தோன்
பொன்மணிபணிகள்பூண்டு புலந்திரன்வருகின்றனே.

புலந்திரன் தரு

பாண்டவர்நடுவோனுன காண்டீபன்சுதனுய்வந்த
வேண்டியபணிகள்பூண்டுமே புலேந்திரராஜன்
    வேகமதாய் ஓடிவாரானே

தாயருமழைத்தசேதி நீதியாயறிவோமென்று
சாயலாநடைநடந்துமே புலேந்திரராஜன்
    சபைதனில் வந்துமேவினன்

சித்திரநிகர்த்ததோழர் சுற்றிலும்நெருங்கிசூழ
தித்திமிதிகர்தமென்றுமே புலேந்திரராஜன்
    சித்தேசன்போல் வந்துமேவினன்

கீர்த்தியாசொக்கேசர்பாதம் நேர்த்தியாய்மறவாசீலன்
பார்த்திபன்மைந்தனென்றுமே புலேந்திரராஜன்
    பண்புடன் சபையில்வாருனே பாண்

புலந்திரன் சரணசரு

அரனருளாலேயென்னே வரம்வாங்கிபெற்றதாயே
அன்னேயேஉன்பாதத்திற்கு சின்னவன்பணிந்தேனம்மா

சுருள் அன்புடனிருதாள் அடியிணைபோற்றினேன்
இன்பமாசேவடியில் இருவாகூஷிசாற்றினேன் அ

அல்லி தரு

சேவடிதனில்பணிந்த செல்வமேநீஎந்தநாளும்
பூவடிமறந்திடாமல் பூதலத்தில்வாழ்ந்திருப்பாய்

சுருள் புத்தியில்சிறந்த என்உத்தமபாலா
இத்ததிதனிலே வாழ்குவாய்மேலா சே

புலந்திரன் வேறு தரு

எந்தனின்தாயே சிந்தையில்நீயே
எண்ணிஅழைத்த தென்னயென்தாயே
குந்தகமில்லாமல் அந்தநோர்சேதியை
குறைதனைசொல்லுமம்மா அன்னையாரே எ

அல்லி தரு

ஐவர்கள்மெலிந்து அருந்துயரடைந்து
ஆகாசொற்பனம்கண்டேன் என்மகனே
தெய்வத்தின்செயலோ தீவினைப்பயனோ
திரேகம்நடுங்குதடா என்மகனே ஐ

புலந்திரன் தரு

பாலனிருக்க பஞ்சவர்திகைக்க
பதருதேஎன் மனதுஎன்தாயே
கோலங்களென்ன கூறிடும்முன்னல்
குழந்தைநான்தீர்த்து வாரேன் அன்னையாரே பா

அல்லி 'தரு

பதின்மூன்றும்கடந்து படுந்துயரடைந்து
பதைத்துகிடக்கின்றாரே என்மகனே
சதிசெய்ததுரியன் மதியதுகுறைய
சர்ப்பனை என்செய்தானே என்மகனே ப

புலந்திரன் கவி

சர்ப்பனைசெய்தானென்று சந்தேகப்படவேவேண்டாம்
அற்பனும்துரியன்தன்னை அதாகுதம்செய்துயிப்போ
விற்பனமுள்ளஐவர் வேந்தரைக்கண்டுயர்னும்
சொற்பனம்தனையறிந்து சந்திரன்வாரேனம்மா.

பொது வசனம்

இந்தப்பிரகாரமாக அல்லியும் புலந்திரனும் பேசிக்கொண்டு இருக்கும்போது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் பாண்டவாகளும் அல்லிக்கு நிருபம் எழுதுகிறவிதம் எப்படியென்றால்,

தருமர் அகவல்

செழித்திடும்மதுரை சீர்பெறஆளும்
தழைத்திடும்செங்கோல் தான்அல்லியற்கு
எழுதினேன்நிருபம என்னவென்றாலே
ஊழ்வினைப்பயனால் வுபலாவியத்தில்
களைத்துமேநாங்கள் கலங்கியேவிழுந்தோம்
இளப்பதைநீக்க யிக்ஷணம்வந்தால்
உயிரதுபிழைப்போம் உண்மையைச்சொன்னோம்
திருக்கொன்றுமில்லை தியங்கிடவேண்டாம்
உருக்கமாய்நாங்கள் உனக்கறிவித்தோம்
என்னமோவென்று யிருந்திடவேண்டாம்
இப்பவேதருமர் எழுதினேன்நிருபம்.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் தூதுவர் அல்லியிடம் நிருபத்தை கொடுக்க அல்லி புலேந்திரனை நிருபத்தை வாசிக்கச் சொல்ல புலேந்திரன் நிருபத்தை வாசிக்க அல்லி துயரப்படுவது.

அல்லி கவி

அப்பனேமகனேவாடா அதிசயமொன்றுசொல்வேன்
செப்பியபடியேஓலை செல்வனேவந்ததப்பா
எப்படியிருக்குதோசொல் யேந்திழைதெரியயிப்போ
சொற்படிபார்த்துநீயும் சருக்குடனுரைசெய்வாயே.

புலேந்திரன் கவி

அம்மணிசொல்லக்கேளாய் அரைகுவேன் வுபலாவியத்தில்
நம்மிடதந்தைமார்கள் நலங்கியேயிருப்பதாக
செம்மையாய்ஓலைதன்னில் சீக்கிரம்வருவதாக
எம்மிடபெரியதந்தை யெழுதியநிருபம்தானே.

அல்லி புலம்பல் தரு

ஐயோஉபலாவியம் ஐவர்கள்வந்ததென்னு
ஆயாசமாகினேன் சங்கரனே

மெய்யதுசோர்ந்துமே வையகம்தன்னிலே
மெலிந்துகிடக்கலாச்சே சங்கரனே

பட்டத்தரசரில் இஷ்டமுள்ளமாமாவும்
பரதவிக்கவிட்டாயோ சங்கரனே

காண்டாவனமெரித்த ஆண்டவாஎன்நாதா
களைப்பட்டுவிழுந்தாயோ சங்கரனே

இளையோர்நகுலசகாதேவா மலைபோன்றநாதரும்
எண்ணாதும்எண்ணினரோ சங்கரனே
கற்பகம்போன்றநாதர் கலங்கியேதவித்திட
கன்னியிருக்கலாமோ சங்கரனே
அருமைதமக்கையரும் பெரும்பாவிதுரியனால்
அவதிக்குள்ளாகினரோ சங்கரனே அ

புலேந்திரன் கந்தார்த்தம்

அங்கமும்நொந்துவாடி அன்னையேஅழுகவேண்டாம்
கங்கையைத்தரித்தயீசன் கிருபையுமிருக்கும்போது
திங்கள்போல்தந்தைமார்க்கு தீங்கொன்றும்வந்திடாது
செங்கையில்சிலையுமேந்தி,

தரு

சென்றுநான்வாரேனம்மணி விடையதுதந்தால்
கண்டுநான் வாரேனம்மணி
அன்றயன்விதிப்படி அன்னையேநடந்திட்டால்
இன்றுநாம்தடுத்திட்ட யிருவராலாமோதாயே

சுருள் இப்படிசொல்வது தப்பிதமாமே
சொற்படிகண்ணன் நற்பதமிருக்க செ

அல்லி வேறு தரு

ஏகச்செல்வனேச்சே போகலொண்ணாதடா கண்மணியே
ஆகாதுரியனும் அரும்பிழைசெய்குவான் நன்மணியே

புலேந்திரன் தரு

சத்திராதிதுரியனை யித்ததிதன்னிலே வெல்லுவேனே
சித்தம்கலங்கிட மந்திரபூபதிதன்னை கொல்லுவேனே

அல்லி தரு

பெற்றமனைம்பித்து பிள்ளைமனம்கல்லு கண்மணியே
அத்துமீறிச்செல்ல சித்தத்திற்கேற்குமோ நன்மணியே

புலேந்திரன் தரு

போகவேண்டாமென்று புகல்வதுசரியல்ல அன்னைபாரே
யேகினலவ்விடம் என்னைவெல்லுவாருண்டோ அன்னையாரே

அல்லி கவி

பட்டத்துக்குரிமையான பாலனேசொல்லக்கேளாய்
திட்டமாய்உபலாவியம் திறமதாய்சென்றுநீதான்

கட்டமதாகநீயும் கனமுள்ளஉன்தந்தைமாரை
சட்டமாய்பார்த்துவாராய் சம்பிரமாய்விடையும்தந்தேன்.

பொது வசனம்

இவ்விதமாக புலேந்திரன் தாயாரிடம் விடைபெற்றுக் கொண்டு உபலாவியம் நாடிவருவது.

புலேந்திரன் கவி

விடையுமேஅளித்தபோது வேணசந்தோஷமாகி
தடையில்லாதோழரோடு தக்கதோர்விருதுபூண்டு
குடையாளும்என்தந்தைமாரை குழந்தைநான்காணவேண்டி
சடையீசன்தன்னைப்போற்றி சலுதியில்நடக்கின்றேனே.

வசனம்

இவ்விதமாக ஆகா என் தோழர்களே என் தந்தையார் உபலாவியம் இருக்கின்றார். நான் சீக்கிரம் செல்லவேண்டும்.

புலேந்திரன் நொண்டிச்சிந்து தரு

அதிவிததோழரேவாரும் நல்ல
அணிமுத்துமயமானரதமதிலேறும்
துதிபெரும்புறவியைத்தூண்டும் ஆகா
சுருக்குடன்தந்தையைக்காணவேவேண்டும்
ஏழ்மையாய்மனம்யேங்கினரோ அவர்
எவ்விதம்உபலாவிவந்துசேர்ந்தாரோ
காதகத்துரியன்செய்சூதால் ஐவர்
காட்டில்பதின்மூன்று ஆண்டுமேஉய்தார்
துரோணர்வீஷ்மர்கர்னன்சகுனி இவரை
துண்டம்துண்டமாய் வாளால்கண்டிப்பேன்அவரை
வணங்காமுடிகொண்டதுரியன் அவனை
வாட்டிபம்பரம்போலஆட்டுவேனிவனை
துர்ச்சாதனன்தம்பிமாரை யிப்போது
துரைசிங்கமெனபாய்ந்துகொல்வேன்தப்பாது
கவுரவர்குலமதையழிப்பேன் ஆகா
கடிகிபுறவிதூண்டிரதம்ஓட்டும்பாகா
உபலாவிபட்டணம்வந்தேன் அன்பா
உற்றமாயன்தந்தைகண்டனேதென்பா (தத்தோம்.)

புலேந்திரன் தரு

ஐந்துதந்தைமார்களே மைந்தனுன்உங்கள்பாதம்
அருமைபாலன்பணிந்தேன் தந்தையாரே

சிந்தையிலெண்ணியே தந்தநிருபமென்ன
செப்புவீர் இன்னதென்று தந்தையாரே ஐ

தருமர் தரு

குந்தகமில்லாமல் குவலயம்தன்னிலே
குறைவில்லாவாழ்ந்திருப்பாய் என்மகனே
அந்தநிருபம்தன்னை உந்தனுக்குரைத்திடுவேன்
அச்சமில்லாமல்கேளும் என்மகனே க

புலேந்திரன் தரு

எண்ணத்திலிருப்பதை இப்போதேஅறிவித்தால்
எதிரிகளெவரானாலும் தந்தையாரே
திண்ணமாய்படைகளை குண்ணும்படியடிப்பேன்
திறமாய்வுரைத்திடுவாய் தந்தையாரே எ

அர்ச்சுனன் தரு

உரைப்பதென்னமகனே துரைத்தனமிப்போதில்லை
உலகளந்தோனிருக்க என்மகனே
தரைபுகழ்பரந்தாமன் தாளடியைப்பணிந்தால்
தந்திரம்அறிவிப்பார் என்மகனே உ

புலேந்திரன் தரு

அன்றுகாளிங்கன்மீதில் நின்றுநடித்தபாதா
அடியேன்வந்தனம் செய்தேன்பரந்தாமா
குன்றையெடுத்தமாயா கோபியரைகார்த்தநேயா
கோடிசரணம்செய் தேன்பரந்தாமா அ

கிருஷ்ணன் தரு

சந்திரகுலம்விளங்க வந்தபுலேந்திரனே
சதாகாலம்வாழ்ந்திருப்பாய் குணசீலா
விந்தையாகபஞ்சவர்க்கு சிந்தைமகிழச்செய்த
விசையபூபதிபாலா விளம்புவேன்கேளாய் ச

புலேந்திரன் கவி

வார்த்தையும்உரைப்பேனென்று வண்மையாய்சொன்னதேவா
பூர்த்தியாயின்னதென்று புகலுவாயின்னதென்று
நேர்த்தியாயுபலாவியம் நீங்களும் அழைத்ததென்ன
கீர்த்தியாயுலகோர்மெச்ச கெடிபெறஉரைசெய்வாயே.

கிருஷ்ணன் தரு

அழைத்தவிபரத்தைக்கேளும் அன்புடன்சொல்லுவேன்நாளும்
தழைத்திடும்தந்தையர் தரணியையாண்டிட
செழித்திடதூதுக்கு சென்றுநீவருகுவாய் அ

புலேந்திரன் தரு

தூதுக்குயாரிடம்செல்வது தூளபமணிந்தவாபுல்கிடு
யேதுக்குயிப்படி யிந்தசூதுசெய்தீர்
வாதிக்குதேமனம் நீதியோபரந்தாமா தூ

கிருஷ்ணன் தரு

வாதனை ஒன்றுமே எண்ணுதேபாலா
வருத்தமடைந்துமே குண்ணுதேபாலா
சாதனைசெய்தானே சண்டாளதுரியனும்
சூதுபகடையாடி சுத்தமோசம்செய்தான் வா

புலேந்திரன் தரு

மோசம்செய்தானென்றீர் அய்யனேஎன்னுல்
முடிவதுஎன்னமோ மெய்யனே
காசாம்பூவண்ணனே கழல்வதுசரியல்ல
கூசுதேஎன்மனம் குழந்தையும்நான்சொல்ல மோ

தருமர் தரு

இனத்தினில்சென்றவன் பாலனே அநேக
இமிசைகள்செய்தானே கீலனே
கனத்தராஜரீக மதைபற்றிக்கொண்டானே
வனத்தில்காலம்தள்ள வகைமோசம்செய்தானே இ

புலேந்திரன் தரு

உந்தன்கருத்தென்ன தந்தையேயிப்போ
உற்றதைசொல்லிடும் எந்தையே
சிந்தையிலேநீரும் சந்தேகங்கொள்ளாதீர்
எந்தனிடத்தாயார் சந்தேகம்கொள்வாளே உ

தருமர் தரு

தந்தைசொல்லைவிட கண்மணிஉலகில்
மந்திரம்வேறுண்டோ நன்மணி
முந்திஉளவைச்சொல்லை மைந்தனேஎண்ணியார்
நந்தன்வாக்குபோல நாடதைக்கேட்டுவா ந

கிருஷ்ணன் தரு

ஊக்கமாசென்றுமே யிந்திரா நீயும்
உளவறிந்துவா சுந்திரா

ஏக்கமதுகொண்டு எண்ணிநீபாராதே
சாக்கிரதையாய்ச்சென்றுமே சலுதியாநீவாராய் ஊ

புலேந்திரன் கவி

வருகுவேன்சென்றுயானும் வையமேஅளந்தமாயா
தருகுவேன்ஒருவிண்ணப்பம் தயாபராஉந்தனுக்கு
பெருகியேரதம்தானொன்று பிரியமாய்தருகவேண்டும்
கருமுகில்மேனியான கண்ணனே அருள்செய்வீரே.

கிருஷ்ணன் கவி

சற்றுமேஅஞ்சவேண்டாம் சம்பிரமாய்உனக்குவாய்த்த
உற்றதோர்பவளத்தேரு உந்தனுக்கிருக்கும்போது
மற்றுமோர்ரதங்கள்வேண்டாம் மருகனேசொல்லக்கேளும்
பற்றுதல்கூடாதென்ற பகைவனேகேட்டுவாராய்

பொது வசனம்

அகோதெப்படியென்றால் பாண்டவர்களுக்கு பாகம் கேட்க புலேந்திரனை துரியனிடம் தூது அனுப்ப நேமித்திருக்க துரியன் கொலுவாக வருவது.

துரியோதிரன் வருகிற கவி

மணிமகுடம் சிரமீதில் பளபளென்ன
மங்களமா சகுனிகர்னன் அருகில்நிற்க
அணியணியாய் சேனைகளும் நெருங்கிசூழ
அன்பாக ஆயுதம் கரத்திலேந்தி
கணிமுரசு பேரிடங்கா வாத்தியம்பாட
கன்னியர்கள் ஆலவட்டம் இருபால்போட
துணிவுடைய தம்பிமார்கள் இருபால்சூழ
துரியபதி கொலுவாக வருகின்றேனே.

துரியோதிரன் தரு

பன்னகக்கொடியோனை நன்னயத்துரியபூபன்
மன்னன்கொலுவதாகினேன் ஜெயமங்களமாக
மன்னன்கொலுவதாகினேன்

சென்னியில்மகுடமின்ன கன்னியர்சாமரைபோட
கின்னரிகிம்புருவாத்தியம் திடுதிடென்றேமுழங்க

கொடிபெற்றதீரன் உலகோர்மெச்ச
படையுள்ளவீரன்
சுருள் கிட்டியேமந்திரி மார்களும்சூழ
கட்டியனும்கன ஆசிகள்கூற ப

சரக்கூடம்போலமைத்த அரக்குமாளிகைதன்னில்
பெருக்காய்புரோசனனால் சுருக்காளரியச்செய்தேன்
பிரியமும்கொண்டேன் ஐவரைக்கொல்ல
மறுமொழிவிண்டேன்
சுருள் பெருத்தமதகிரியை யிறக்கவேஎண்ணி
கருத்துடன்விஷத்தால் உயிர்பறிக்கவேசெய்தேன் ப

வாரணம்தேரணி மாவும்காவலர்சூழ
காரணமுள்ளசேனை கவிந்துகுடைபிடிக்க
காதலாய்தம்பி மார்களை
கனமுடன்நம்பி
சுருள் கத்திகேடயம் தனுவாளேந்தி
சுற்றிலும்பதினோ ரக்ரோணிசூழவே ப

தாயார்தனக்கிளைய தம்பிசகுனிதன்னால்
மாயச்சூதாடச்செய்து மண்ணைப்பறித்தோட்டினோன்
மனமதுவாட ஐவர்
வனமதிலோட
சுருள் மங்கைபாஞ்சாலியை பங்கமும்செய்தேன்
பொங்கமாசபையில் மங்கிடநின்றான் ப

துரியோதனன் கவி

பெருமைசேர்சகுனிமாமா புகலுவேன்வார்த்தைஒன்று
திறமையாககோவுதன்னை திருப்பியேசென்றஐவர்
வருமையாய்நாடுதன்னை வந்துமேகேட்பாரோதான்
உருகுதேஎந்தன்நெஞ்சம் உளவதுசொல்லுமாமா.

சகுனி கவி

மகாமண்டலேசனன மருகனேசொல்லக்கேளும்
அகலசென்றைவருக்கு அரசதுசொந்தமில்லை
புகலுவேன்உந்தனுக்கு போனவர்பதிமூன்றாண்டு
பகருவேன்சபையினின்று பாத்தியமில்லைதானே.

துரியோதனன் தரு

பாத்தியமில்லையென்று நேர்த்தியாய்சொல்லவந்தீர்
பகர்ந்திடவேண்டுமிப்போ மாமாவே

கீர்த்தியாய்பாண்டவர்க்கு ஆஸ்திசொந்தமென்று
கெடிபெறுமோஉலகில் மாமாவே பாத்

சகுனி தரு

கெடிபெறஉலகத்தை கொடியதைநாட்டுவேன்
கிஞ்சிற்றும்நினையாதே மருகோனே
அடவிசென்றஐவருக்கு திடமாய்ராச்சியமேது
ஆராய்ந்துகலைபாரும் மருகோனே கெடி

துரியோதனன் தரு

கலையதைபாருமென்று நிலையதாய்சொல்லவந்தீர்
கருத்தினில்தோணவில்லை மாமாவே
விலைமாதர்பேச்சைப்போல் விளம்பவந்தீர்யின்று
வேடிக்கையோயிது மாமாவே கலை

சகுனி தரு

வேடிக்கையாய்சொன்னேனென்று வாடிக்கைபேசவந்தீர்
விபரம்அனேகம்உண்டு மருகோனே
நாடிபன்னிரண்டாண்டு நாட்டைவிட்டோட்டினீர்
நான்கூடஓராண்டுவைத்தேன் மருகோனே வே

துரியோதனன் கவி

நல்லசந்தோஷமாச்சு நலமுள்ளஎந்தன்மாமா
வல்லமையாகநானும் வகையுடன்நாட்டைஆள்வேன்
தொல்லுலகினிலேநம்மை துதித்துக்கொண்டாடுவார்கள்
மெல்லியாள்என்துதேவி மேன்மையாய்வரச்செய்வீரே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் துரியராசன் சகுனியிடம் சில வார்த்தையாடியிருக்க பெருந்திருவாள் கொலுவாக வருகிறது.

பெருந்திருவாள் வருகிற கவி

பன்னகக்கொடியோன்நம்மை பக்ஷமாய்அழைத்தசேதி
உன்னிததாதிமார்கள் உரைத்திடயானும்கேட்டு
யின்னதென்றறிவோமென்று யேந்திழைபணிகள்பூண்டு
கன்னியாள்பெருந்திருவாள் காரிழைவருகின்றாளே.

பெருந்திருவாள் தரு

சந்திரவதனமுள்ள சுந்திரத்தாதியர்சூழ
சற்குணவதியும்வந்தாள் பெருந்திருவாள்
நற்குணவதியும்வாராள்

கந்தம்கதம்பம்பூசி விந்தையாய்நயனம்பேசி
சிந்தையிலானந்தம்கொண்டு எந்தன்நாதரைக்கண்டு

சுருள் செங்கதிரொளியென மங்கையாள்மேனி
திங்களைப்போலவே யெங்கும்பிரகாசனி சங்

பொறுமை அன்னநடையாள் கருமைஅளகைபாரம்
திருமுகத்தில்திலர்தம் அருமையுடனேவைத்து

சுருள் சித்திரகம்மல் எத்திசைமதிக்க
நத்துபுலாக்கினில் முத்துசொலிக்க ச

கண்டசரங்கள்மார்பில் கனகரத்தினமொலிக்க
வண்டணிமாதர்கள் வந்துஆசீர்வதிக்க

சுருள் வங்கிவளையலும் கங்கணமின்ன
தங்கசரப்பளி தாழ்வடம்துன்ன ச

வாலவயதுடையாள் வனத்துசிங்கத்திடையாள்
காலில்தண்டைக்கொலுசு மேலும்கீதங்கள்பாட

சுருள் கலகலவென்றுமே சத்தமொலித்திட
நலமதாய்மன்னரை நங்கையாள்கண்டிட ச

பெருந்திருவாள் சரணம் தரு

சாரசபை அலங்கார மெட்டு

அத்திணபுரியாளும் உத்தமரேநாதா
நாதாநாதா வந்தனம்
வித்தகரேயானும் கொத்துமலர்கொண்டு
கொண்டுகொண்டு நான்செய்தேன்

சுருள் வேண்டினேன்உந்தனை ஆண்டிடுமன்னரே
பூண்டுமேமகுடம் ஆண்டப்பிரகாசரே அ

தூரியன் தரு

வந்துபணிந்திட்ட எந்தனிடதேவி
தேவிஎன் அருமைஆவி
புத்திமகிழவே எந்தநாளும்வாழி
வாழிபதம் பணிந்தாய்

சுருள் புத்தியில்மிகுந்த உத்தமிதேவியே
இத்தலம்தன்னிலே நித்தமும் வாழ்குவாய்

பெருந்திருவாள் தரு

இச்செகம்தனிலே உச்சிதமாயழைத்தாய்
யழைத்தாய் எனதுநாதா

கச்சணியாளிடம் மெச்சிடவேசொல்லும்
சொல்லும் கருத்தறிய
சுருள் காசினியோர்களும் பேசிபுகழ்ந்திட
மாசில்லாமன்னரே ஆசையாய்சொல்லிடும் இ

துரியன் தரு

நல்லதோர்வசனம் சொல்லிடுவேன்கேளும்
கேளும் மனமகிழ
வல்லமையாகவே நல்லநகராள
ஆளனது அம்மான்
சுருள் வார்த்தையைசொல்லவே நேர்த்தியாயழைத்தேன்
பூர்த்தியாய்ராச்சியம் கீர்த்திநமக்காச்சே ந

பெருந்திருவாள் கவி

கீர்த்தியுமாச்சுதுஎன்று கெம்பீரமாகச்சொன்னீர்
வார்த்தையில்வழக்கேயில்லை வையகத்தில்ஒப்புவாரோ
பூர்த்தியாய்எனக்குநீரும் புகல்வதுசரிதானில்லை
நேர்த்தியாபெரியோரின்னம் நிகழ்வதுஎவ்வாறுமோ.

துரியோதிரன் தரு

சட்டப்படிமாமன் இட்டகட்டளைப்படி
சாட்டினார்பதின்மூன்றுண்டு ஓட்டினார்
அட்டியுண்டோயினிமேல் கட்டுக்கதைகள்வேண்டாம்
அன்னமேயெந்தன் சொர்னமே
சுருள் அரிவையேபெரியோர் முறைப்படிதானே
மறுமொழிமாமன் உரைத்தனர்தானே ச

பெருந்திருவாள் தரு

திங்கள்குலத்தில்வந்த மங்களமானநாதா
திகட்டுறீர் வீணாய்புகட்டுறீர்
தங்கும்புகழுடைய தாமோதரனிருக்க
தஞ்சமா ஐவர்க்குபஞ்சமா
சுருள் தழைத்திடபாரும் பிழைத்திடநீரும்
உழைத்துமேவீணாய் குழைத்துமேபேசுறீர் ச

துரியோதிரன் தரு

வீணாயுரைத்தேனென்று தோணாமல்பேசுறாய்
விபரிப்பேன்உனக்கு [illegible]விப்பேன்
வாணாள்ஐவருக்கு வனமேதான்இனிசொந்தம்
வஞ்சியே சொல்வேன்ரஞ்சியே

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 10403I
O—, 892 NVP3, C N46

சுருள் வாதனைவேண்டாம் தீதொன்றுமில்லை
ஓதினேன்உனக்கு ஒழிந்துதேதொல்லை வீ

பெருந்திருவாள் தரு

தொல்லைகளில்லையென்று சொல்லிடும்மன்னவரே
தோகையாள்கேட்டேன் ஆகையால்
பிள்ளைஉந்தன்லக்குணற்கு பிசகில்லைபட்டம்கட்ட
பிழையில்லா ஐவர்க்கு பழியில்லை
சுருள் பின்னமில்லாமலே பிரியமுமில்லை
மன்னரேஉம்மிட சொல்லையும்கண்டேன் தொ

திரியோதனன் கவி

கண்டுமேகொண்டமாதே கருத்துள்ளஎனதுதேவி
கொண்டேனுன்மனசந்தோஷம் குறையொன்றுமினிதானில்லை
விண்டநான்பலமதாக விண்ணுலகத்தோர்மெச்ச
வண்டணிகுழலாளான வானையேயிருந்திடாயே.

பெருந்திருவாள் தரு

கனகசுந்திரமாரா கழலுவேனுன்தீரா
கன்னியாளும்உன்னிதமா பின்னமில்லாவார்த்தையொன்று
கடிகிதீர்த்தமாட கண்ணாளாசொல்வீர்நாட க

திரியோதிரன் தரு

நாடிபோகும்மாதேஉன் கூடயாருகோதே
நங்கையாளேயிங்கிர்தமா சங்கையுடன்வருவதாரோ
நவின்றிடுவாய்மாதே நங்கையேயிப்போதே நா

பெருந்திருவாள் தரு

சபையோர்மெச்சிடும்தீரா சாற்றுவேன்கெம்பீரா
சம்பிரமுடன்திருவணையாள் யின்பமுடன்சென்றிடுவோம்
சற்குணஓய்யாரா சந்தோஷமேகெம்பீரா ச

திரியோதிரன் தரு

அரிவையாளேசென்று வருவீர்களேயின்று
ஒருமையுடன் இருவர்களும் பிரியமதாய்தீர்த்தமாடி
உத்தமியேமானே சித்தமகிழ்ந்தேனே அ

பெருந்திருவாள் கவி

உச்சிதமானதாதி உரைப்பேனுனுந்தனுக்கு
கச்சணிதங்கையாளே கனமுடன்வருகவென்று

அச்சமில்லாமலிப்போ அரிவையயேநீங்களோடி
மெச்சும்திருவாணை தங்கை மெல்லியையமைழத்துவாராய்.

பொது வசனம்

இவ்விதமாக திரியோதிரனும் பெருந்திருவாளும் ராசாங்க விஷயங்களை பேசிக்கொண்டு சந்தோஷமடைந்தபிறகு பெருந்திருவாள் நந்தவனச்சிறப்பை பார்த்து விளையாடிவருவதாய் தன் நாயகனை உத்திரவுகேட்க திரியோதிரன் உத்திரவளிக்க அப்போது பெருந்திருவாள் தன் ஓரகத்தியாகிய திருவணையை அழைக்க அப்போது மற்ற ஓரகத்திமார்களும் கூடிக்கொண்டு திருவணையாள் கொலுவைநாடி வருகிறவிதம் எப்படியென்றால்.

திருவணை கவி

ஆசையாய்தமக்கையாளும் அன்புடனழைத்தசேதி
ஓசையைக்கேட்டுதாதி ஓடிவந்தெனையழைக்க
வீசியேதம்பவாடை வெகுவிதபணிகள்பூண்டு
மாசிலாதிருவணையாள் மங்கையும் வருகின்றாளே.

திருவணை தரு

மாந்துளிர்போல்வதனி மங்கையாள்யெந்தன்மேனி
மாதுதிருவணைவந்தாள் அதிலையிலாக
மாதுதிருவணைவந்தாள்
கோதியேமயிர்முடித்து தாதியருடன்ஒத்து

சுருள் குங்குமகளபம் மங்கையாள்பூசி
இங்களைப்போலவே வந்தவிஸ்வாசி மாந்

ஆலிலைபோல்வயிறுள் வாலவயதுடையாள்
வேலைப்பழித்தவிழி மேலேலமையைதீட்டி

சுருள் வெகுவிதபணிகளும் தகதகவென்ன
நகையொளிவதனமும் நயமுடன்துன்ன மாந்

பத்தரைமாத்துள்ள கொத்துசரங்களாட
முத்துமல்லிகைசூடி நத்துபுலாக்குமாட

சுருள் முகமதில்திலர்தம் மெல்லியாளிட்டு
செகமெலாம்புகழும் சேல்விழிநெட்டு மாந்

பரிவாய்சரிகைசேலை சரியாயிடையணிந்து
அறிவில்சிறந்தமாது அழைத்தவிதமறிய

சுருள் அந்தவிபரமதை சந்தேகம்தெரிய
வந்துநான்காண சிந்தையுமானேன் மாந்

திருவருணை சரண தரு

தமைக்கையாளேஉந்தன் தாளிணைக்கேவந்தனம்
தாளிணைக்கேவந்தனம் தங்கையாளும்தந்தனம்
தாமரையேமலர்கொண்டு வந்தனம்செய்தேன்
சுருள் தன்மையுடன் உண்மையதாய்
நன்மையுடன் போற்றிசெய்தேன் தமை

பெருந்திருவாள் தரு

போற்றிசெய்ததங்கா பூவையேஎந்நாளும்
பூவையேஎந்நாளும் பூமிஉள்ள அளவும்
புகழ்பெறவேயிந்த பூதலத்தினில்வாழ்வாய்
சுருள் புத்தியுடன் சித்தமதாய்
நத்தியேநீ வாழ்ந்திருப்பாய் போ

திருவருணை தரு

மங்களமாயென்னை யிங்கேஅழைத்ததேனோ
யிங்கேயழைத்ததேனோ தங்கையாளெந்தனை
சிங்காரமாகவே சிறந்தசபைதனிலே
சுருள் செகம்புகழ் மனம்மகிழ
அகங்குளிர அருள்வாயேநீ மங்க

பெருந்திருவாள் தரு

அருளுமென்றஎந்தன் ஆசையுள்ளதங்கையே
ஆசையுள்ளதங்கையே அறிவிப்பேனுனிங்கே
நறுமலர்வனம்சென்று நாமேவிளையாடுவோம்
சுருள் நற்குணத்தில் அற்புதமாய்
சொற்படியே கிரீடைசெய்வோம் அரு

திருவருணை வசனம்

அக்கா உன்னிட இஷ்டப்படிக்கு நந்தவனம் தடாகம் சென்று விளையாடிவருவோம் தமக்கையே.

பெருந்திருவாள் தரு

தடமதைநாடி தாதியர்கூடி
அடவியைத்தேடி அன்பாய்விளையாடி
மடமயிலாளே மகிழ்வோமின்றுளேமேலே தட

திருவருணை தரு

வெகுகாலமாக புகழ்வனம்போக
தகுமானகாலம் வெகுவிதஞாலம்
சுகுணாபரணம் சொகுசாய் அணிந்துணிந்து வெ

பெருந்திருவாள் தரு

தங்கக்குடம்கொண்டு தையலாள்சலம்கொண்டு
பங்கமில்லாமல்சென்று பந்தடிப்போமின்று
கொங்கைகுலுங்க கும்மியடிக்கதுடிக்க தங்

திருவருணையாள் தரு

தாமதமேனோ தமக்கையே காணோ
பூமணம்வீச புகழ்கிள்ளைபேச
நேமனப்படியே நேர்மையாகூடி ஆடி தா

பெருந்திருவாள் கவி

சோதரிநாமுமிப்போ சொகுசுள்ளவனமேவந்தோம்
பாதரியோடுகொன்றை பலவிதபுஷ்பங்கொய்து
ஆதரித்திடும்மணாளர் அரிவையேகோபிக்காமுன்
மாதரும்நிழலைநோக்கி மகிழ்ச்சியாய்செல்லுவோமே.

திருவருணையாள் தரு

என்னசிங்காரமோ இந்தவனப்பெருமை
என்னசிங்காரமோ

சந்தனமரமிகுந்த சயிட்டுள்ளதோப்புகள்
பந்தியாவாழைகமுகு பனந்தெங்குநேர்த்தியும்
கங்குல்பகலேநிறைந்த கானமயில்கோஷ்டமும்
கருகுமணலோட்டம் களிப்படையநாட்டம்
திகழ்விசும்பு வாட்டம் எ

பெருந்திருவாள் தரு

என்னகாண்காக்ஷியோ இவ்வனத்தினுக்ஷியோ
பன்னகசயனன்சூதன் பள்ளிகொள்ளும்ஆக்ஷியோ
கன்னல்மதனவனும் கண்டால்வாளியெய்குவான்
இன்னம்தாமதமில்லா இருந்திடவுமாட்டமாம்
இனிபிடிக்கவாட்டம் கொள்ளுதெனக்குநாட்டம்
கோதையே வாஓட்டம் எ

பெருந்திருவாள் கொச்சகம்

நம்முடையநந்தவனம் நாதனவர் அமைத்தவிதம்
செம்மையுடன்நாம்கண்டு செல்வியேமனமகிழ்ந்தோம்.

திருவணையாள் கொச்சகம்

கொம்மைசேர் தமக்கையரே கூறுவேன் உந்தனுக்கு
இம்மையிலேகாண்பதற்கு இதுவேகுபேரவனம்.

திருவணையாள் வசனம்

ஆ! என் அக்கா இதத்திலேயும் பரத்திலேயும் இவ்வளவு செழித்தோங்கியவனம் கிடையாது என்று எண்ணுகிறேன். சற்று நேரம் சலக்கிரீடை செய்து விளையாடி கண்தெளிந்து பந்து விளையாடி கும்மி யடித்து நமது மாளிகை செல்லுவோம் தமக்கையே.

பெருந்திருவாள் தரு

தங்கையேவாராய் பந்தை இங்கையேதாராய்
செங்கரம்தனிலெடுத்து சீராகமுன்விடுத்தேன்
பங்கம்வாராமலே பாவையேபிடித்துக்கொள்ளும் தங்

திருவணையாள் தரு

நற்றினேன்பந்தை கையிற் பற்றினேன்பந்தை
நற்றியேவிடுத்தபந்தை சித்தமகிழ்ந்தெடுத்தேன்
சுற்றிசுழட்டிபந்தை சுருக்குடனேஎறிந்தேன் நற்

பெருந்திருவாள் தரு

பந்தடித்தோமே நாமும் வந்தநேரமா
சொந்தமுள்ளதிருக்குளத்தில் வந்தவரெல்லாரும்நாடி
பந்தியாதீர்த்தமாடி பாவையரெல்லாருங்கூடி பந்

திருவணையாள் தரு

செல்வோம்நாடியே நாம் தீர்த்தமாடியே
செல்வோம்நாமனைவர்களும் சேடியருடனேகூடி
பாடிசங்கீர்தமுடன் நாடியேமனைதேடி செல்

பெருந்திருவாள் கவி

கன்னியென்மனதுக்கேற்ற கருத்துள்ள தங்கைமாரே
பின்னமில்லாமலிப்போது பிரியமாய்ஸ்நானம்செய்தோம்
சின்னவளெல்லோரும்நாங்கள் சீரதாய்ப்பந்தடித்தோம்
தன்னிகரில்லாகும்மி தையலேஆடிச்செல்வோம்

பொது வசனம்

அகோதெப்படியென்றால் பெருந்திருவாளையும் தன் ஓரகத்திமார்களும் நந்தவனத்தில் வேடிக்கைபார்த்து பந்துகள் விளையாடி குளத்தில் ஸ்நானஞ்செய்து சற்றுநேரம்இளைப்பாறி கும்மியடித்து போவதால் உத்தேசித்து இருக்க அச்சமயத்தில் உபலாவியத்தில்

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் உத்தாரப்படிக்கு புலேந்திரன் அஸ்தினாபுரியைநாடி தன் தந்தைமார்களுக்கு பேர்பாதிராச்சியம் கேட்பதாய் தோழர்களோடும் அனேக சேனைகள்சூழ புலேந்திரன் வருவது.

புலேந்திரன் கவி

பூமியையளந்தபாதன் புருஷோத்தமன்சொற்படிக்கு
ஆமிதுமெய்தானென்று அடைவுடன்புலேந்திரராசன்
காமியாவுபலாவியம்விட்டு கடுமையாரதத்திலேறி
நேமியா அஸ்தினாபுரியைநாடி நிபுணனும்வருகின்றேனே.

புலேந்திரன் தரு

ஆரடா தோழரே நேரதாரதமதை
அதட்டிப்புரவிதன்னை ஓட்டுவீர் இப்போ
அஸ்தினாபுரிக்கு நிலைநாட்டுவீர்
காடுமலைகுன்றுகள் கானாறுஓடைகள்
கடுகிஅதைதாண்டினோம் மந்திரியிப்போ
அடியும்பேரிகை சத்தம்தந்திரி
விஜயனிடமைந்தனான் புஜபெலபுலேந்திரன்
யென்னைவெல்லவல்லவ ருண்டாநன்றுசொல்
வீரரெதிர்த்துவந்தால் துண்டமாய்கொல்வேன்
அஸ்தினாபுரியது விஸ்தாரம்தெரிகுது
அமர்த்திரதமதனை நிறுத்துவீரே
அழகானநந்தவனத்தி லிறங்குவீரே

புலேந்திரன் கந்தார்த்தம்

அபத்தமேசெய்துவந்த அந்தகன்மைந்தனானேன்
கபத்தமறியவேண்டும் கடுமையாய்நாமுமிப்போ
சுபத்தையும்தருகாவண்ணம் சுருக்கினிலிதையழித்து
விபத்துகள்வருருமாறு,

தரு

வெட்டினேன்பாராய் மரங்களை
தட்டினேன் நேராய்
மட்டிதுரியனவன் கெட்டயெண்ணமெல்லாம்
கொட்டிடதேளது பட்டவர்படும்பாடாய்
அருள் கொடியவன்தனை நொடியிலறிகுவேன்
கடிகிவனமதை பொடியாசெய்குவேன்

பொது வசனம்

இந்தப்பிரகாரம் புலந்திரன் நந்தவனத்தையழிக்க காவலர் ஓடி துரியனுக்கு சொல்ல துரியோதிரன் கோபம்பிறந்து சொல்லுவது.

திரியோதிரன் கவி

காவலர்கள்வந்துமொழி கூறக்கேட்டு
கண்கள்ரெண்டும்பொறிபரக்க உதட்டைக்கவ்வி
பூவணத்தை அதம்செய்த துஷ்டன்தன்னை
போர்செய்து அவனுயிரை மாய்க்காவிட்டால்
மூவர்களும்தேவரா யிருந்தபோதும்
முறிந்தோடிஅவர்களை அதமேசெய்து
கேவலமென்றெனையெண்ணி வந்தோன்றன்னை
கெடிபெறவேநமனுலகம் சேர்ப்பேன்பாராய்.

துரியோதிரன் நொண்டிச்சிந்து

ஆரடாமந்திரிமார்களே இங்கே
அச்சமில்லாலொருபையல் உச்சிதமுடன்
பாரடாநந்தவனத்தில் இப்போ
பட்டுவிழுமரங்களை வெட்டியெறிந்தான்
பூஞ்சோலைபுஷ்பச்செடிகள் அனைத்தும்
பிடிங்கிஎறிந்து அதம் நடுங்கச்செய்தான்
புறப்படும்சேனைகளே திருடனை
பிடித்திடுவோம்கட்டி அடித்திடுவோம்
சேரடாமாமன்சகுனி கர்னனை
சீக்கிரமாயழைத்தேனென்று கூப்பிடுவீர் (தந்தினம்.)

துரியன் வசனம்

ஆரடா நமது நந்தவனம் பூந்தோட்டம் பூஞ்சோலை தடாகம் இதுகளை யாரோ ஒருவன்வந்து அதம் செய்துவிட்டானாம். நமது சேனைகளை தயார் செய்துவிட்டு எனது அண்ணாவாகிய கர்னமகா ராஜனை நான் அழைத்ததாக சீக்கிரம் அழைப்பியும் மந்திரி.

கர்னன் கவி

அறமெனும்தர்மதானம் அனுதினம்மறவாசீலன்
பரமனைதினம்துதிக்கும் பரிதியின்மைந்தனுன
சிரமதில்மகுடமின்ன சிறந்ததோர்பணிகள்பூண்டு
கரமதில்சிலைவாளேந்தி கர்னபூபதிவந்தாரே.

கர்னன் தரு

அருணனுடையமைந்தன் தரணியுள்ளோர்புகழும்
அதிபெலகர்னன்வந்தேன் கொலுவைநாடி
அதிபெலகர்னன்வந்தேன்

கிரணவடிவமின்ன கீர்த்திப்பிரதாபனென்ன
வருணன்வாயுகுபேரன் வாழ்த்திஎனையேபன்ன

சுருள் வச்சிரபுயமும் உச்சிதம்பெருகிட
மெச்சியரம்பையர் இருபுறம்நடித்திட அ

வட்டக்குடைகவிய சுட்டிப்பளபளென்ன
கட்டியேசெகதாடு காந்திகிகிகென்ன
சுருள் கத்திகேடகம் கிலேவாளேந்தியே
தத்திமிதிமியென தாளமும்முழங்கிட அ

குண்டலம்செவியிலாட கண்டவர்மனதுவாட
புண்டரீகனைத்தினம் போற்றிதுதிகள்கூற
சுருள் பூரிகைபேரிகை டமரமொலித்திட
நாரியர்மனமது கண்டுகளித்திட அ

தம்பிதுரியன்நம்மை அன்பாய்அழைத்தசேதி
சம்பிரமுடனேசென்று சங்கதிஅறிவோமென்று
சுருள் தானதருமமும் வேணதுசெய்பவர்
ஞானசிரோன்மணி யாகியஉய்பவர் அ

துரியோதிரன் கந்தார்த்தம்

திரேகியாவந்தவர்க்கு தினம்தினம்அறமேதந்து
புரோகிதர்பரசுராமனல் புலமதாய்பயிற்சிகற்றீர்
கரமதால்தந்தையார்க்கு கலப்புழுநீக்கிவைத்த
பரவசமாகும் அண்ணு.

தரு

பாதமேசரணம் எனது அண்ணு
பணிந்தேநான்கருணம்
ஆதரவாகவே அழைத்தேநானுந்தனை
சுருள் அங்கதேசத்தை தாங்கிஆண்டவா
இங்கேமனமது பொங்கிவாடுறேன் பா

கர்னன் கந்தார்த்தம்

அஸ்தினபுரத்தைநீரும் அடவுடன் ஆண்டுவந்தும்
கஸ்திகள்தந்ததென்ன காரணமறியச்சொல்லும்
வஸ்திரம்களைந்தபோதே வனமதில்ஐவர்சென்றார்
விஸ்தாரமாகநீயும்,

தரு

விளங்கிடும்வாழி வாழிநீயும்
துலங்கநீடூழி
கலங்கிதவிப்பதென்ன கருத்தையறியச்சொன்னல்
சுருள் கண்டமன்னவர் தெண்டனிட்டிடும்
மண்டலாதிபர் விண்டுபுகலுவாய் வி

துரியோதனன் தரு

.ம் சாருதேஎன்மனம்
சொல்லமனதுவல்லேயே சொல்லமனதுவல்லேயே
ஆறுதலில்லாமல்

சொல்லமனமில்லாமல் அல்லல்படுதேநெஞ்சம்
வல்லவராயிருந்தும் தொல்லையடையலானேம்

சுருள் வாதனையாகுதே சாதனையோயிது
வேதனைநேர்ந்துமே தீதுகளாகுமோ சொ

கர்னன் தரு

என்னகாரணம்சொல்லுவாய் எனக்கதுதெரியவே
பிணக்கமில்லாமலே என்னகாரணம்
மன்னுதுரியபூபா மனக்குறைவந்ததென்ன
நன்னகர்தன்னில்நீயும் நலங்கிதவிக்கவேண்டாம்

சுருள் நத்தியேயெனக்கதை சித்தமாய்சொல்லும்
மத்திபமில்லாமல் உத்தமாவிள்ளும் எ

துரியோதிரன் தரு

ஆரோநந்தவனத்தினில் அடைவுடனேரதம்
திடமுள்ளதோழரும் ஆரோநந்தவனத்தினில்
வேரோடுமரங்களை வெட்டியெறிந்திட்டானும்
சாரணர்களும்தப்பி சங்கதிவுரைத்திட்டாரே

சுருள் சத்தரூதுகள் கத்தஐவரை
பற்றியேவனமதை கொத்தியழிக்குமுர் ஆ

கர்னன் தரு

அதிபதியாயிருந்துமே அட்டியில்லாமலே
மட்டிலாசேனையுண்டு அதிபதியாயிருந்துமே
கெதியில்லாபாண்டவர்கள் கிளம்பியேவந்திட்டாரோ
பதியானதூதுவிட்டு பலத்தையறிந்துகொள்வோம்

சுருள் பத்திரண்டகம் என்சித்தம்நினையுமோ
தத்திதவிக்காதே தரணிப்பிரதாபா அ

துரியோதனன் கவி

தூதுக்குசெல்லவேண்டி துரிதமாயுரைத்த அண்ணு
வாதுக்குவருகுமுன்னே வரலாறுஅறியவேண்டும்
தோதுகளறிந்துசொல்ல துருசுள்ளமனிதனுரோ
சாதுக்குளான அண்ணு சாற்றுவீரறியத்தானே!

கர்னன் கவி

கலந்தாரிமைந்தனுன கருத்துள்ளபாலன்தன்னை
நலம்தரயின்றுநாளில் நவின்றிட்டேனுந்தனுக்கு
புலம்தனையறிந்துக்கொண்டு புகழுடன்வருவான்சொன்னேன்
பிலந்தரும்சின்ன அர்ச்சுனனை பிரியமாய்அனுப்புவோமே.

கர்னன் வசனம்

கேளும்தம்பி துரியோதனு நமது நந்தவனம் பூஞ்சோலை தடாகத்தை அதம்செய்த திருடனை கட்டி இழுத்து வரும்படி யானவன் யாரென்றால் நமது கலந்தாரியின் குமாரன் சின்ன அர்ச்சுனனை அனுப்பினால் அவர்களை செயம்பெற்று தேர்காலில் கட்டி இழுத்துக் கொண்டுவந்து நம்மிடம் சேர்ப்பான் துரி யோதனு!

துரியோதிரன் வசனம்

அடா காவலாளிகளே! கலந்தாரியின்குமாரனுன சின்ன அர்ச்சுனனை சீக்கிரம் அழைத்துவாரும் மந்திரி.

சின்ன அர்ச்சுனன் வருகிற கவி

அண்டமுமதிஜெயிக்க அரண்மனை தன்னைவிட்டு
மண்டலத்தோர்கள்போற்ற மன்னனும்அழைத்தசேதி
கண்டறிந்திடுவோமென்று கரமதில்வாளுமேந்தி
செண்டதைபோன்றசின்ன அர்ச்சுனன்வருகின்றனே.

சின்ன அர்ச்சுனன் தரு

திரைகடலுலகோர்மெச்சிடவே புலேந்திரன்மைந்தன்
சின்னஅர்ச்சுனன்வந்து யேவினனே
புரவலர்களும்கண்டுநடுங்கிட போசராசர்கள்மிகஒடுங்கிட
அரவக்கொடியன்அழைத்திட அறியவேண்டிமனதுகளித்திட தி

ஆரம்சரப்பளிதகதக வென்றிடவேமிகஒயிலா
அணிந்கரத்தின பணிசொலித்திடவே
மாரனுக்கெதிர்தீரனென்றிட மாமலர்களும்பணிகுலுங்கிட
சூரதீரரும்அடிபணிந்திட துண்டவீரரும்கண்டுவணங்கிட தி

வல்லையங்களும்வாளு மிலங்கிடவேதோமரம்யீட்டி
வில்லுடன்தனுவேலும் துலங்கிடவே
சல்லரிகளும்பம்பைகொட்டவே தவன்மல்லரிகோளமூட்டவே
பில்லைசேவகர்வந்துகிட்டவே பேரிபூரிகைடமாகம்தட்டவே தி

பட்டுதுருவுடன்குச்சுமிலங்கிடவே மேனகைரம்பை
பாவையர்யிருபுறமும் சூழ்ந்திடவே
விட்டசுங்குடன்கட்டியிறுக்கியே வீரனென்றுமீசைமுருக்கியே
இட்டபணிகளும்மிகதிருத்தியே யீசனடியானும்போற்றியே தி

சின்ன அர்ச்சுனன் வேறு தரு

தாத்தாஉன்பாதம்வந்தனம் இந்த
தனையன்சிறுவனைநீர் கவனமுடனழைத்தீர்
தாத்தாஉன்பாதம்வந்தனம்

நேர்த்தியதாகவே கீர்த்தியாயெந்தனுக்கு
பூர்த்தியாசொல்லுவீர் புலமதுதெரியவே
சுருள் பூரணமாய் அதை தாரணிஅறிய
காரணுசேதியை கழலுவீர்புரிய தாத்

துரியோதனன் தரு

சேவடிபணிந்தபேரனே ஒருசிறுமையில்லாமலே
பெருமையாய்வாழ்வாய் சேவடிபணிந்தபேரனே
ஆவலாய்நம்முடைய அருமைநந்தவனத்தை
காவலரை அடித்து கலங்கிடவேசெய்தானும்
சுருள் கள்ளமில்லாமலே மெள்ளநீசென்று
தொல்லைவராமலே அறிந்துவாயின்று சேவ

சின்ன அர்ச்சுனன் தரு

வந்தகுறைதானென்னமோ இப்போ
வருத்துரைசெய்வீர் க்ஷணத்திலறிய
வந்தகுறைதானென்னமோ
சிந்தைகலங்கவேண்டாம் சின்னம்சிறுவனென்று
விந்தையைஎடுத்துரையும் கொந்திகுலைகள்செய்வேன்
சுருள் வீரனென்றாலும் தீர்மாய்க்கொல்வேன்
பாரினிலேஉந்தன் கெடியதைசொல்வேன் வந்த

துரியோதனன் தரு

கொடியைநிலையாய்நாட்டுவாய் இந்த
கெடிபெறஅஸ்தின புரியதைஆள
கொடியைநிலைநாட்டுவாய்
படிமிசைஉனதுதந்தை பக்ஷமாய்புலேந்திரன்வந்தால்
சடிதியில்பார்த்தவனை தயவாயழைத்துக்கொள்ளும்
சுருள் சாற்றினபடியே நாற்றிசை அறிய
பூர்த்தியமுடியும் புலமதுதெரிய கொ

துரியோதிரன் கவி

துய்யஉன்தந்தையானால் துரிதமாயழைத்துக்கொள்ளும்
ஐவர்கள்உனதுபாட்டன் அவர்களாயிருந்தாரானால்
வைதுமேகொன்றுபோட்டு வந்திங்கேசேர்வாய்பாலா
மெய்யதாய்சொன்னேன்யானும் மேதினியறியத்தானே.

துரியன் வசனம்

கேளும் சின்ன அர்ச்சுனா! உன் தந்தை புலேந்திரனாயிருந்தால் அழைத்துக்கொள்ளும் உனது பாட்டன்மார் பாண்டவர்களாயிருந்தால் கொன்றுபோட்டு சீக்கிரம் வாரும் பாலகா.

சின்ன அர்ச்சுனன் தரு

மட்டிதுரியனே அட்டியில்லாவார்த்தை
ஏது என்ன வாது
கெட்டியாஐவரை வெட்டும்படிசொன்னாய்
மூடா மதி கேடா
அண்டுகண்ணன்பெற்ற மைந்தனுமானதால்
ஆரடா பதி சேரடா
சிந்தையிலேநீயும் சிறுவனென்றெண்ணியே
செப்பிட மனம் ஒப்பிட
பாட்டன்மாரைக்கொல்ல தேட்டையாய்சொல்கிறாய்
தர்மமா இன்னம் வர்மமா
கட்டளைதவறாமல் திட்டமாய்நகராள
வருதுவார் அன்பு பெருகுவார்
சூதுபகடையால் சுத்தமோசம்செய்த
துரியனே கெட்ட வெரியனே
வாதுகள்செய்துமே வஸ்திரபங்கம்செய்த
வஞ்சமா பஞ்ச பாதகா மட்

துரியோதனன் கந்தார்த்தம்

எட்டியென்னிடமேபேச இதுவரைபொறுத்துப்பார்த்தேன்
மட்டியேபயலேநீயும் மரியாதையில்லாவார்த்தை
கொட்டியேகுலக்கவந்தாய் குறிகெட்டபயலேநீயும்
வெட்டியாசோத்தையுண்டு,

தரு

வீரங்களேது உனக்கிந்த
தீரங்களேது
கூறும்மொழியெல்லாம் குழந்தையென்றுபொறுத்தேன்
பாரும்என்வாளினால் பதறிடக்கொல்லுவேன் வீ

கர்னன் தரு

ஆத்திரப்படாதேதம்பியே எந்தன்வார்த்தையை
பூர்த்தியாகேளும்நம்பியே
கீர்த்திப்பிரதாபனாக கெடிபெறஉலகைஆண்டும்
பார்த்திபன்போன்மீது பகையதாநினையாதே ஆ
துஷ்டத்தனங்கள்பேசுறாய் பெரியோரிடம்
கஷ்டம்வந்திடவீசுறாய்
இஷ்டமுடனேசென்று எவராயிருந்தபோதும்
நஷ்டவார்த்தைகள்வேண்டாம் நலமதாய்பார்த்துவாரும் து

கர்னன் வசனம்

கேளும் தம்பி துரியோதனா! சிறுபிள்ளையின்பேரில் கோபிக்க லாகாது. நாம் மண்டலாதிபதியாயிருந்து மற்றொருவர் யோசனை சொல்வது சரியல்ல ஆகா வாருமப்பா சின்ன அர்ச்சுனா பெரி யோர்பேரில் தூஷணமான வார்த்தை பேசுவது சரியல்ல இருவ ருக்கும் பொதுவாக யான் சொல்லும்படியான வார்த்தையைக் கவனித்துக்கேள் அதோ என் நந்தவனத்தில்வந்து பாளையமிட்டு இருப்பவர்களை இன்னாரென்று தெரிந்துக்கொண்டு சீக்கிரம் வாருமப்பா சின்ன அர்ச்சுனா.

சின்ன அர்ச்சுனன் வசனம்

ஆனால் தங்கள் உத்தாரப்படி சென்று வருகிறேன் எனக்கு ரதம் ஒன்று தரவேண்டும் அரசே.

கர்னன் வசனம்

அப்படியே உன் சொற்படிக்கு விசித்திர ரதம் தந்தேன் சீக்கிரம் சென்றுவாரும் பாலகனே.

சின்ன அர்ச்சுனன் தரு

உத்தமனார்சொற்படிக்கு சித்திரதத்திலேறி
பத்தியுடன்தோழர்சூழவே நந்தவனத்தை
எத்திசைநடுங்கவாரானே

சத்தமும்கலகலென்ன சித்தமுமகிழ்ந்துமாதர்
சுற்றிலும்காவலர்சூழவே சொகுசுடனே
தத்தியேமாதர்களாடவே

பட்டணம்தன்னையேதாண்டி திட்டெனரதத்தைதூண்டி
கட்டழகன்மனங்களித்துமே சின்னஅர்ச்சுனன்
களிப்புடனேதேடிவாரானே

அழகுடையநந்தவனம் புகழுடன்வருகும்போது
அரிவையர்அனேகர்கூடியே பந்துகளாடும்
ஆனந்தத்தையென்னசொல்குவேன் உத்த

பொது வசனம்

இப்படியாக சின்ன அர்ச்சுனன் நந்தவனம் நாடி வருகின்ற போது பெருந்திருவாளும் ஒரகத்திமார்களும் கும்மியடிப்பது.

பெருந்திருவாள் கும்மி தரு

கும்மிகளடிப்போம் செம்மையதாகவே
கூந்தலசையாமல் சார்ந்தவரை
பொம்மையைப்போலவே செம்மையதாகவே
போடுங்கடிகும்மி ஆடுங்கடி கும்மி

திருவருணை கும்மி தரு

ஆசைக்கிசைந்திடும் நாதரைப்போலவே
தேசத்திலெங்கணும் கண்டதில்லை
வாசம்பண்ணுமலே ஐவருங்காட்டினில்
தேசாந்திரிப்போலே ஆகினரே ஆசை

பெருந்திருவாள் கும்மி தரு

பஞ்சவர்ஐவரும் நெஞ்சம்துடித்திட
பத்தினிதுரோபதை துயிலுரிந்தார்
அஞ்சியேஐவரும் பஞ்சுபோல்பறக்க
வஞ்சியாளுடனே யேகினரே பஞ்ச

திருவருணை கும்மி தரு

கூந்தலைப்பற்றியே எந்தனிடநாதர்
கோதைபாஞ்சாலியைக் கொண்டுவந்து
சார்ந்திடும்பெரியோர் முன்னிலேசபையில்
சாமாரியாகத் துயிலுரிந்தார் கூந்த

சின்ன அர்ச்சுனன் சீசபத்திரம்

தோழர்களேபார்த்தீரா தோகையர்கள் ஆடுவதை
தாழ்வானவார்த்தைசொல்லி தரணியெல்லாம்சொந்தமென்றும்
யேழ்மையாபோனரென்றும் எந்தனிடதாதையர்கள்
வாழ்வரசிபத்தினியை வஸ்திரபங்கம்செய்தானும்

முடுக்கு

வசனிப்பதும்இவர் தர்மம்தானே
திசைமுகன்சென்னியில் எழுதினனே
கசகசவெனமாதர் றனேகரேனே
கலங்கிடச்செய்குறேன் காலைநானே

பெருந்திருவாள் தரு

வருகிறவனரோதங்கையே நாம்
வளர்த்தபேரன்தானே யிங்கையே
மருமம்தெரிந்தாலே மாறுபாடுசெய்வான்
குறைவுவாராமுன்னே கோதையேசெல்லுவோம் வ

திருவருணை தரு

மறைவாக அப்புறம்ஏகுவோம் அவன்
மறைந்தபிறகுநாம் வருகுவோம்
விரையொன்றுபோட்டாலே சுரையொன்றுகாய்க்குமா
அறகற்றுக்கொண்டது தருதலையாச்சுதே ம

சின்ன அர்ச்சுனன் தரு வேறு

ஓடாதீர்ஓடாதீர் உத்தமியென்பாட்டிகளேஓடாதீர்
பாடினபாட்டைக்கண்டு பாலனும்யான்மகிழ்ந்தேன்
ஆடினகும்மிபோலே ஓடிவந்தடிப்போம்வாரீர் ஓடா

பெருந்திருவாள் தரு

போடாநீபோடாநீ புகல்வதுசரியல்லபோடாநீ
எடாகூடமாகப்பேசி எங்களிடம்வாதுவேண்டா
நாடிஎங்கேபோராயோடா நலமுடனேசொல்லும்பேரா போ

சின்ன அர்ச்சுனன் தரு

பேசாதீர்பேசாதீர் பொய்யானவார்த்தைகள்பேசாதீர்
பாசமாஉங்களோடு பாலன்கும்மியடிக்கவந்தேன்
ஆசையுள்ளபாட்டிகளா அடியும்கும்மிபோேடு பே

திருவருணைத் தரு

ஆனந்தம்ஆனந்தம் அனைவரும் கும்மியடிக்கஆனந்தம்
கானமயிலையொத்த கன்னியரெல்லாருங்கூடி
தேனமுர்தம்போன்றபாலன் திருமொழியைப்போலஆடி ஆ

சின்ன அர்ச்சுனன் வசனம்

ஆனல் கேளும் எனது பாட்டிகளே நீங்கள் பாடினபாட்டு அதிக சந்தோஷமாயிருக்கின்றது நீங்கள் இப்போது நான் பாடும் பாட்டை கவனித்து கும்பியடிப்போம் வாருங்கள் பாட்டிகளே.

திருவருணையாள் வசனம்

அப்படியே நமது பேரன் சொற்படிக்கு கும்பியடிப்போம் வாரும் தமக்கையே.

சின்ன அர்ச்சுனன் தரு

பட்டித்தனமாக கெட்டுடன்என்னோடு
பாட்டியேகும்மி யடிக்காதீர்
வட்டிக்குவட்டியாய் பாங்கும்படியானும்
வையகத்தில்வந்த பாலன்தானே ப

சின்ன அர்ச்சுனன் வசனம்

ஆனல் கேளும் பாட்டியர்களே எனக்கு தெரிந்தவரையில் பாடினேன் நீங்கள் முன்னே பாடினபாட்டை மறுபடியும்பாடியாடுங்கள் நான் சற்றே பார்த்துக்கொண்டு இருக்கிறேன் பாட்டிகளே.

பெருந்திருவாள் தரு கும்மி

ஆசைக்கிசைந்திடும் நாதரைப்போலவே
தேசத்திலெங்கினும் கண்டதில்லை

வாசம்பண்ணுமலே ஐவரும்காட்டினில்
தேசாந்திரிபோல ஆகிறாரே ஆசை

திருவருணையாள் தரு கும்மி

கூந்தலைப்பற்றியே எந்தனிடநாதர்
கோதைதுரோபதையைக் கொண்டுவந்து
சாய்ந்திடசபையில் ஓய்ந்துபோகும்படி
சரமாரியாகவே துயிலுரிந்தார் கூந்

சின்ன அர்ச்சுனன் கந்தார்த்தம்

பாவிதான் இவர்கள்போல பாரதில்கண்டதில்லை
கூவியேமாதர் தானும் கொண்டானும்அடித்தபோது
ஆவியும்கலங்குமாராய் அலங்கோலம்செய்துயானும்
தாவியே துயிலைப்பற்றி,

தரு

தந்திரமாகயிழுத்தான் சேலைகள் தன்னை
பந்திபந்தியாகமுழித்தார்
அந்தகன்மருமக்கள் சிந்தைகலங்கிடவே
விந்தையாய்துரியனிடம் வந்துமாதர் அபயமிட த

பொது வசனம்

இவ்விதமாக சின்ன அர்ச்சுனன் துரியன் தேவிமார்கள்
99-பேர்களை துயிலை உரிந்தபோது அபயமிடுவது.

பெருந்திருவாள் தரு

அபயமபயமையா சுவாமி
அரவக்கொடியோனே உனக்கபயம்
மெய்யும்பதறிடவே நாங்கள்
மெல்லியரெல்லோரும் உனக்கபயம் அ

திரியோதனன் தரு

அபயசத்தமென்னுமாமனே அதை
அறிந்தோடிவருகுவீர் நேமனே
உபாயமாகச்சென்று உற்றசேதிதன்னை
சமயமாகச்சொன்னேன் சாற்றுவீர்அறிந்திட அப

திருவருணை தரு

என்னசெய்வோம் எதுசெய்வோம்நாதா
யேங்கிமனம்வாடி தேங்கலானோம்
சின்னம்சிறுஅர்ச்சுனனும் அவன்எங்கள்
சேலைகளைந்துமே பங்கம்செய்தான் என்

துரியோதிரன் தரு

நாதாவென்றசத்தம் கேட்குதேமாமா
நலமதாய்பார்த்திடும் யிப்போதே
யேதேதுபெண்குரல் யேகமாய்அழுதருள்
வாதனை அறிகிலேன் வர்மத்தைதெரிந்துவா நா

சகுனி தரு

பார்த்துநான்வந்தேனே மருகோனே அந்த
பங்கத்தையென்னசொல்வேன் துரியனே
தீர்த்தமாடப்போன தேவிமாரெல்லோரும்
பூர்த்தியாய்பங்கமாய் போனாரேஎன்சொல்வேன் பார்

துரியோதிரன் வசனம்

ஆகா அப்படியா எவ்விதமாக அவமானமடைந்தார்கள். நல்லது மாளிகைசென்று ஆடையாபாணம் எடுத்துக்கொண்டுபோய் மறைவாகநின்று அவர்களை சேலையுடுத்திக்கொண்டு சீக்கிரம் யெனது தேவியும் தம்பிமார்கள் தேவியும் வரச்செய்வாய் மாமா.

சகுனி வசனம்

அப்படியே இதோ சீக்கிரம் உன் உத்திரவின் பிரகாரம் செய்கின்றேன் மருகனே.

திரியோதிரன் தரு

யாரவனிப்படிசெய்தவன் அரிவையேஉங்களைவைதவன்
வீரத்தனமுள்ள சூரனானபோதும்
வெட்டுவேன் கொட்டுவேன் தட்டுவனவனைநான் யா

பெருந்திருவாள் சம்பை தரு

மன்னவரேஎன்னரசே இந்த மங்கையர்கள்படும்துயரம்
சின்னஅர்ச்சுனனவனும் எங்கள் சேலைதனையுரிந்தான் மன்

திரியோதிரன் தரு

பாவையரேஇங்கேவாருமே உங்களை
பங்கமேசெய்தானோ பாருமே
ஆவிப்பதரிட அதோகெதிசெய்குறேன்
ஆட்டுவேன்வாட்டுவேன் ஓட்டுவேன்நமன்பதி பா

திருவருணை சம்பை தரு

கட்டும்கலைசேலைதனை துஷ்டபயல்தானுரிந்து
வெட்கம்போகவிட்டானே வேந்தர்களிருந்துமென்ன

துரியன் வசனம்

ஆகா நல்லது உமது தேவிமார்களுடைய சேலைகளையுரிந்து அவமானம்செய்த துஷ்டப்பயலை கட்டியிழுத்து வரும்படியான

வல்லமைசாலியாகிய தம்பி துர்ச்சாதனனை சீக்கிரம் அழைத்து வாரும் மந்திரி.

துர்ச்சாதனன் வருகிற கவி

இச்செகத்தோர்கள்மெச்ச யிணையில்லாவீரதீரன்
கச்சையும்வரிந்துகட்டி கையினில்சிலைவாளேந்தி
மெச்சியேதமையன்நம்மை மேன்மையாயழைக்கக்கேட்டு
துர்ச்சாதனன்புலிபோல்பாய்ந்து துருசுடன்வருகின்றானே.

துர்ச்சாதனன் தரு

தீரனும்துர்ச்சாதனபுலி நானே-நல்ல
சிலைவீரர்தொண்ணூத் தொன்பதுபேரில்
வீரனும்துர்ச்சா தனன்வந்தானே
பேரும்பெருமையுற்ற சீரும்சிறப்புடையோர்
சுருள் கோரியதமையனும் நேரினிலழைக்க
சாரியாஅவரடி யானுமேதுதிக்க தீ

பஞ்சபசங்களெனக் கிடோ-இந்த
பாரினிலெங்கவர் ஓடினபோதிலும்
நெஞ்சமுருகியானும் சாட
கெஞ்சிநாடதைக்கேட்டால் பஞ்சாபறக்கடிப்பேன்
சுருள் அஞ்சலென்றவ ரடிபணிந்தாலும்
கொஞ்சமுமனமிரங் காதுமென்மேலும் தீ

தீரனென்கிற ஐந்துபேரின்-ஆகா
மனைவியாளெனும் துரோபதைதன்னை
திடமாதுயி லுரிந்தேன்முன்னில்
சூரனென்றிட்டஐவர் யாரையென்னசெய்திட்டார்
சுருள் சோரத்தனமதாய் வீரியம்பேசுவார்
நேரினில்வந்தால் மனமதுகூசுவார் தீ

அண்ணாரெண்ண மதனைப்போல-இப்போ
ஆண்டுகளோபதின் மூன்றுமேஆச்சுது
ஐவர்க்குசொந்த மில்லையினிமேலே
தின்னஒருவாய்மண்ணு என்றும்கொடுப்பதில்லை
சுருள் தேசுலாவும்பர தேசிகள்போலவே
வாசமினிக்கிடை யாதினிமேலே தீ

துர்ச்சாதனன் சரண தரு

செந்திருபாதமதில் சிந்தைவைத்துயான்பணிந்தேன்
அண்ணலே உந்தன்முன்னிலே
யெந்தனையழைத்தவிதம் சிந்தனையில்லாமலிப்போ
அறியவேசொல்லும் தெரியவே

சுருள் அஸ்தினுபுரிதனை யாண்டிடும்தீரா
கஷ்டமில்லாமலே நவின்றிடும்வீரா செ

துரியோதனன் தரு

திருவடிபணிந்துநின்ற அருமையுள்ளயென்தம்பி
சிரதாய்வாழ்குவாய் மேலதாய்
உரிமையுடனழைத்தேன் வருமைஎன்சேதிசொல்ல
உருகுதேமனம் கருகுதே
சுருள் உத்ததோர்தம்பியே சித்தமும்வாடுதே
பித்துபிடித்தவன் போல்மனம்நாடுதே திரு

துர்ச்சாதனன் தரு

வாடுதென்றுசொல்லவந்தீர் வல்லவரேஎந்தன்அண்ணு
வாட்டமோ மனம்நாட்டமோ
நாடுநகர்பூமிதன்னில் கேடுகளேதாவதுண்டோ
நவிலுமே நன்ருய்புகலுமே
சுருள் நத்தியென்தமையா சித்தமும்வாடுநீர்
· பத்தியாயென்னிடம் உற்றதைசொல்லும் வா

துரியோதிரன் கவி

வளத்ததோர்மேஷம்தானும் வந்துமேபாய்ந்தாற்போல
களைத்திடமாதர்தம்மை கலையதைஉரிந்திட்டானும்
தளத்துடன்செல்லவேண்டும் தண்மையாநீயுமேகி [யே
குளத்தினில்மலர்கொய்தாற்போல் கொக்கரித்திடசெய்வா

துரியோதனன் வசனம்

கேளும் தம்பி துர்ச்சாதனு நமது வீட்டில் செஞ்சோறுஉண்டிருந்த பையல் சின்ன அர்ச்சுனனென்பவனை அழைத்து நமது நந்தவனத்தில் யாரோ படையோடு வந்து அதம்செய்ய காவலர் என்னிடம் தெரிவித்தார். அதையறியும்படிக்கு இந்த பையலை அனுப்பினேன். இவன்போகும்போது நமது தேவிமார்கள் கும்மி அடித்தார்களாம் அதாவது ஐவர்களையும் அவர் தேவி பாஞ்சாலியையும் இழிவாகப் பேசினுரென்றும் அதின்பேரில் இவனுக்கு மனம் தாளாமல் பதிலுக்குப்பதிலாய் நமது தேவிமார்கள் தொண்ணூத்தொன்பது பேரையும் நிர்வாண பங்கம்செய்து சேலைகளையுரிந்து அவமானம் செய்துவிட்டான் நாம் ராச்சியமாண்டும் என்ன கெடுதி நேரிட்டது. இப்போது சீக்கிரம் சென்று அவனை கைப்பிடியாக பிடித்து கட்டிக்கொண்டு வாரும் தம்பி.

துர்ச்சாதனன் சிந்து தரு

தமையனுர் சொச்படிக்கு துர்ச்சாதனன்
தத்தளித்துகோபமாகி உக்கிரமாகவே

நிமையினிலவனைக் கொல்வேன் இப்போ
நேர்த்தியாகயெமலோகம் சேர்த்துவிடுவேன்
சமயமே வாச்சுதென்று ஆகா
சண்டாளப்பையலே நான் துண்டம்செய்குவேன்
மண்டியிட்டு சிலைமீறி மீசைமுருக்கி
மடையற்கு பிறந்திட்ட சிறுபையனும்
கண்டபடி துயிலுரிந்தான் மாதர்களை
கத்திகலங்கிடவே குத்துவேன்பாராய்
ஒற்றைசாண் உண்டோபையல் என்வீட்டில்
மொத்தைசோறுஉண்டுவந்து சித்துகள்செய்தான் தந்தினம்.

துர்ச்சாதனன் வேறு தரு

பாரினில்அவன்என்னதீரனே இப்போ
பதைக்கவேகொல்லுவேன்சூரனே

நேரினில்கண்டுயான் நிமிஷத்தில்வெல்லுவேன்
பாரோரறிந்திட பங்கமும் செய்தானே பா

எட்டிவெகுதூரம்வந்தேனே அவனை
எமபுரம்சேர்க்கிறேன் துண்டனே

அட்டியுண்டேயினி அதோகதியாக்குறேன்
கிட்டி அவனைக்கண்டேன் கெர்வத்தையடக்குறேன் எ

துர்ச்சாதனன் கந்தார்த்தம்

வனமதில்வாசம்செய்யும் வம்மிசம்தனிலுதித்த
இனமில்லாசெய்கைசெய்தாய் யிறுமாப்புகொண்டுநீயும்
தனமாதர்என்னசெய்தார் தயங்கிடதுயிலுரிந்தாய்
கனலதுஎரிந்தாப்போல,

தரு

கடிகியேவாளையெடுத்தேன் சிரமதனை
கண்டிக்கவே வந்துகுதித்தேன்
தடமதில்சென்றவன்நீ தையலரைப்பங்கப்படுத்த
இடமுண்டோஉந்தனுக்கு எச்சலுண்டுபிழைத்தவன்

சுருள் ஏத்துவேன்கணை மாத்துவேன்உனை
தூத்துவேன் துயராத்துவேன்
துண்டம்துண்டமாகவே கண்டித்துகூருகூராய்
அண்டமுமதிசயிக்க இன்றுஉன்னைவெல்லுகிறேன் கடி

சின்ன அர்ச்சுனன் கந்தார்த்தம்

தாழியில் கடையும்போது ததும்பிடும்அமுர்தம்போலும்
ஆழியில்கறைந்திட்டாலும் அதமதுசெய்வேன்உன்னை
ஊழிகாலங்களாக உமக்கிந்தஅரசாசொந்தம்
பாழ்வினைவாய்த்ததிப்போ,

தரு

பாணமதைகையிலெடுத்தேன் உந்தனைக்கொல்ல
பாதாளம்நடுங்கவிடுத்தேன்
வீணைவார்த்தைபேசி வாணளொழிக்கவந்தாய்
ஆணவமாகநீயும் தோணமல்அம்புவிட்டாய்
சுருள் ஆட்டுவேன் சாம்பூட்டுவேன்
காட்டுவேன் உனைவாட்டுவேன்
கற்றவித்தைபேசவந்தாய் சத்திராதிமோசக்காரா
சித்துதனமறிவேன் பத்தியாபதிசேரடா பா

துர்ச்சாதனன் கந்தார்த்தம்

வீரியமாகத்தானே வீண்வார்த்தைபேசவந்தாய்
தேரியமொழியைப்பார்த்தால் தேசத்தோர் அதிசயிப்பார்
சிறுவன்என்னிடமேநீயும் சினம்கொண்டுவந்தாயிப்போ
கூசிய அம்பாலுன்னை,

தரு

கொல்லும்படிவில்லைஎடுத்தேன் சரமாரியாய்
குணத்தொனிசெய்துவிடுத்தேன்
பொல்லாதகெர்வம்கொண்டு வில்லாளிஎன்றுநீயும்
செல்லாதுஉந்தன்வீரம் நில்லாமலோடிப்போடா
சுருள் சேர்க்கவேவுயிர் மாய்க்கவே இனி
ஏர்க்கவேபுவி பார்க்கவே
எப்படியும்இக்ஷணத்தில் தப்பாமல்கொன்றிடுவேன்
கப்பிசோறுதின்றவன்நீ செப்பவந்தாய்வீண்வார்த்தை கொ

சின்ன அர்ச்சுனன் கந்தார்த்தம்

அன்றுயிவ்வுலகந்தன்னை அளந்திட்டமாயனோநீ
சென்றந்தபுரமெரித்த சிவன்போல்உறங்கள்சொல்ல
மற்றதில்சிருஷ்டிசெய்யும் மறைவேதபிர்மனோநீ
பன்றிபோல்கட்டுமாறாய்,

தரு

பத்தியிறுக்கிகட்டினேன் சரத்தினாலே
கத்திகதரவாட்டினேன்
எத்திசையறியவே உற்றதூரியன்பக்கல்
நத்திநீபோகவே நாகபாணத்தினாலே
சுருள் நாட்டினேன்தீரம் காட்டினேன்மடல்
ஓட்டினேன்பறக்க சாட்டினேன்
ஓங்கிஅஸ்தினபுரம் தாங்கிஅரசாளுமன்னன்
பாங்காககண்டுஉன்னை பதறிவிழும்படிக்கு ப

பொது வசனம்

அகோதெப்படியென்றால் இவ்விதமாக புலேந்திரன் குமாரன் சின்ன அர்ச்சுனன் துர்ச்சாதனனை நாகஅஸ்திரத்தால் கட்டிவிட இந்த கட்டை சூரியன் வமிசத்தார் தொட்டால் ஒட்டிக்கொள்ளவும் என்னுடைய வமிசத்தார் தொட்டால் விட்டுவிடவும் என்று சொல்லி அஸ்தினாபுரிக்கு அனுப்ப துர்ச்சாதனன் தன்னுடைய திரேகம் மெலிந்து புலம்புகிறவிதம் காண்க.

துர்ச்சாதனன் தரு புலம்பல்

என் அருமை அண்ணாவே சின்னம்சிறுபையலவன்
பிறுகவேகட்டிவிட்டான் அண்ணாவே
கன்னியர்கள் நகைக்க காளையைப்போலவன்
கண்கலங்கச்செய்தானே அண்ணாவே
நெஞ்சம்துடிக்குதே நினைவுகள்மாறுதையோ
நிந்தனைக்கென்னசெய்வேன் அண்ணாவே
பஞ்சவர்குலத்தில்வந்த அஞ்சுவயதானபையல்
பன்றியைப்போல்கட்டிவிட்டான் அண்ணாவே
தீட்டியமரத்தில்கூரு வாட்டமாய்பாய்ச்சதுபோல்
அவன் தீரத்தையென்னசொல்வேன் அண்ணாவே
கிட்டநெருங்கிநீங்கள் யென்கட்டைஅவிழ்த்துவிடும்
கெடுதிவந்திடும் முன்னே அண்ணாவே என

திரியோதிரன் தரு புலம்பல்

மோசமோ தம்பி மேதினியோர்நகைக்க
கூசுதேமனம் மிக்க கொடுமைக்குஎன்செய்வேன்
சுருள் குவலயத்தினில் வலியசெய்தவன்
நிலைமைபார்க்கவே கவலையாகுதே மோ

பாசமாகவே அந்த பையலின்தீரமும்
நாசமாக்கியே உன்னை நாணியால்கட்டினான்
சுருள் நல்லதோயிது வல்லதம்பியே
சொல்லஎன்மனம் தொல்லையாகுதே பா

கல்வியாகப்பேசி கட்டுண்டுவந்தாயே
கலங்கிடதேவிமார் கத்தியேவாடுறார்
சுருள் கரத்தில்கட்டதை கண்டவிழ்த்திட
திறத்தால்என்னையும் தீண்டியிழுக்குதே க

பெருந்திருவாள் தரு

நாதாயிதுவென்ன நானிலத்தோர்பழிக்க
வாதனையோயிது வஞ்சியாள்பார்த்திட

சுருள் வைத்தீர்கரமதை பற்றியிழுக்குதே
மெத்தயென்வயறு தத்திகுழம்புதே நாதா

மன்னவர்கரமதை மங்கையாள்தொட்டிட
கன்னியாளையும்சேர்த்து கதறிடயிழுக்குதே
சுருள் கங்கைதாங்கிடும் மங்கைபாகனே
இங்கேநாங்களும் மங்கிவாடுறோம் ம

திருவருணை தரு

மண்டலாதிபரையும் மன்னவரையும்சேர்த்து
வண்டணியாளையும் வருந்தியேயிழுக்குதே
சுருள் வஞ்சியாள்மனம அஞ்சிவாடுதே
பஞ்சைப்பையலாலே நெஞ்சமுருகுதே ம

பத்தாவைபார்த்துமே கத்தி அலரியே
பித்துபிடித்தவள்போல் எற்றினள்தொட்டிட
சுருள் பின்னிபின்னியே என்னையிறுக்குதே
வன்னியேந்திடும் கன்னிபாகனே ப

சகுனி தரு

அரசன் துரியனும் அருமைபெண்களும்
வரிசையாய்கையை வைத்திடயிழுக்குதே
சுருள் வந்துஎன்கரம் தன்னால்தொட்டேனே
சிந்தைநொந்திட யானும்கெட்டேனே அ

பொது வசனம்

அகோதெப்படியென்றால் துரியோதிரன்முதல் தொண்ணூற்றென்பதுபேர்களும் அவர் தேவிமார்களும் துர்ச்சாதனனுடைய கட்டை அவிழ்க்கும்படியாய் தொடவும், யாவற்றமானபேரும் ஒட்டிக்கொள்ள அப்போது துரியோதனாதிகள் கூக்குரலிட அந்தச் சத்தமானது கர்னன்கேட்டு ஏதென்று சொல்வது.

கர்னன் கவி

அழுகின்றசத்தம்தன்னை ஆதித்தன்மைந்தன்கேட்டு
பழுதென்னவந்ததென்று பராக்ரமன் ஆலோசித்து
மழுதனைக்காய்ச்சிகாதில் மடுக்கெனசாய்த்தாற்போல
விழுகின்றஎனத்தைப்பார்த்து விள்ளுவேன்சொல்லுவேனே.

கர்னன் தரு

என்னமோயிதுவென்ன மோசம்யிப்போ
இழுக்குதே அனைவோருமநாசம்
மன்னன் துரியனும் மாமன்சகுனியும்
அன்னீதமாகவே பின்னேஇழுக்குதே எ

தொட்டபேர்கள் ஒட்டிக்கொண்டசாபம்
தூஷித்தாரோ யிப்போமூண்டிட
அட்டியில்லா தர்மம் அளவில்லா செய்தேனே
தொட்டனேகரத்தினால் விட்டுதேகட்டது தொ

கர்னன் கவி

தடுத்துயான்சொன்னபோது தளத்துடனங்கேநீயும்
விடுத்தகோர்பாணத்தாலே வேதனை அடைந்தாயிப்போ
படுத்திங்கேபுரண்டாலென்ன பலனொன்றும்வருவதில்லை
அடுத்துநாம்விடுதிக்கிப்போ அனைவரும்யேகுவோமே.

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் கர்னராசன் துரியோதனனையும் அவன் தம்பிமார்களையும் அழைத்துக்கொண்டு அரண்மனைசேர அப்போது சின்ன அர்ச்சுனன் அயிராவதத்தின்பேரில் இருந்த படி நந்தவனத்தில் இருக்கப்பட்ட கூட்டங்களைப் பார்த்து யேதென்று சொல்வது.

சின்ன அர்ச்சுனன் தரு

யாரோரதமுடன்சேனைபடையுடன். பாருமதிரவேநிறைந்தனர்
தேரும்புரவியும்காவலர்களும் மாறுபாடுமாய்நிற்குறார்
செழித்தவனமதை அழித்துஅதம்செய்த
கொழுத்தவன்தன்னைக் கொல்லுவேன்
பழுத்தரசவகை மாத்தைபிடுங்கியே
இழுத்தெறிந்தவனை வெல்லுவேன்

சின்ன அர்ச்சுனன் கவி

ஆரடாமலர்வனத்தில் அச்சமும்பயமில்லாமல்
பாரடாஉன்னையானும் பரகெதிசேர்ப்பேனிப்போ
சேரடாஅடவிதாண்டி சிக்கிரம்சென்றாலாச்சு
கூரடாசொல்லாவிட்டால் கொல்லுவேன்வெல்லுவேனே.

புலேந்திரன் கவி

ஆனையின்மீதிலேறி அதும்பியேபேசவந்தாய்
பூனைபோல்நீயும்வந்து புலியின்முன்னெதிர்த்தாப்போல
சேனைகள்யாவுமில்லா சினத்துடன்எதிர்க்கலாமோ
மானைப்போல்குதித்துவந்தேன் மல்லுக்குவருகுவாயே.

சின்ன அர்ச்சுனன் தரு

வருகுவாயென்றுமே வல்லமைபேசுவதேதடா
வாங்கியே அஸ்திரம் தாங்கியேவிடுத்தேன்பாரடா

புரிகுவாயென்னிடம் போரதுசெய்திடவாதடா
பூட்டினேன்சிலகணை வாட்டிடஉந்தனைதீதடா

சுருள் புத்தியில்லாமல்நீயும் அத்துமீறிபேசவந்தாய்
சித்தங்கலங்கிடவே நத்தியேவிடுத்தேனக்கணை வ

புலேந்திரன் தரு

விடுத்தகணையது தொடுத்திடும் புஷ்பம்போலாச்சுதே
கடுத்துமேசரமதுவிடுத்திட உந்தன்மேலாச்சுதே
தடுத்துமேகொள்ளடா தைரியமானால்இப்போதே
தொடுத்துநான்வாளினால் தூளதுபரந்திடதுள்ளாதே

சுருள் துஷ்டதனமுடனே வெட்டியெறியும்படி
விட்டேன்அமோகபாணம் மட்டிபயலேபோடா வி

சின்ன அர்ச்சுனன் தரு

பையலேஎன்றுமே ஐயமில்லாமலே மிண்டனே
கையினால்வாளிய கடிகியேவிட்டிட கண்டனே
நையவேஉன்மனம் மெய்யதுசோர்ந்திட சண்டனே
செய்யவேசுழல் பாணமும்யேவினேன் துண்டனே

சுருள் சற்றேபொறுத்திடடா பத்திவிடுத்தேனக்கணை
முற்றுஞ்சேவிக்கக்கண்டு சற்றேமயக்கமானாய் பை

புலேந்திரன் தரு

மயக்கமுங்கொண்டு தியக்கமாய்நின்றாய் பையலே
மத்தகமும்நீயும் மடிந்திடவாட்டுவேன் கையிலே
அய்க்கமாய்நின்றயா அமரதுபுரியாமல் முன்னிலே
செயிக்கவேஉன்மேல் சிலைகணையேவினேன் இன்னாளே

சுருள் சித்திரகணைகளது யெத்தனைதரம்விடுத்து
நத்தியேஅவன்கழுத்தில் பத்தியாமாலையாவிழ

புலேந்திரன் வேறு தரு

அப்பாசிறுவனேநீ இப்பாரில்யார்புத்திரன்
அறிந்திடயெனக் கோதுவாய்பாலகனே
செப்புஞ்சிலையழகா செங்கரமானலோலா
சேதியைசொல்லவேண்டும் பாலகனே

சின்ன அர்ச்சுனன் தரு

தூர்ச்சடைக்குப்பேரன் தோகைகலந்தாரிமைந்தன்
சொல்லுகிறேன்யெந்தன் தந்தைபுலேந்திரனும்
விற்கணைவாளழகா விள்ளுவாய்நீயெந்ததேசம்
வெளியிடுவாய்எந்தனுக்கு உந்தன்பேரதை

புலேந்திரன் தரு

கண்ணே நான் அல்லிமகன் கலந்தாரியென்தேவி
கற்கண்டே நானும் புலேந்திரன்யென்மகனே
நன்ருக இருவரும் நாடிசமர்புரிந்தோம்
நமதுஞாயந்தெரியா யென்மகனே

சின்ன அர்ச்சுனன் தரு

தந்தையென்றறியாமல் வந்துசமர்புரிந்தேன்
அந்தநிந்தனைக்கென்ன செய்குவேன்தந்தையரே
சிந்தைகலங்கவேண்டாம் செப்புவாய்யென்மனே
சிறுவன்செய்தகுற்றத்தை பொறுப்பீர்தந்தையரே

புலேந்திரன் கவி

என்னென்றுகேட்டபாலா இயல்பானஎன்தந்தைமார்கள்
நன்னகர்நாட்டைக்கேழ்க்க நற்றூது அனுப்பிவைத்தார்
பன்னகன்பதின்மூன்ருண்டு பார்வனம்ஓட்டிவைத்தான்
சொன்னநான்விபரமாய் சுந்தரா அறிகுவாயே.

சின்ன அர்ச்சுனன் கவி

அறிந்தநான்உனதுவார்த்தை அன்புள்ளதந்தையாரே
புரிந்திடதுரியன்பக்கம் போய்பாகங்கேட்டுவாரும்
பரிந்துமேகொடுக்கமாட்டான் பலபலவார்த்தைசொல்வான்
சரிந்திடசேனையோடு சமர்க்களந்தனில்மாள்வாரோ.

புலேந்திரன் தரு

மைந்தனேவாடா அந்தமூட்டையென்னடா
மர்மமதைசொல்லவேண்டும் யென்மகனே
சுந்திரமாக தூதுநான்போக
துரியனிடமேசென்று வாரேனப்பா

சின்ன அர்ச்சுனன் தரு

கோதையர்கூடி கும்மிகளாடி நமது
குலத்தைஇழிவாகச் சொன்னூர்தந்தையரே
மாதுபாஞ்சாலிவஸ்திரம் தன்னையுரிந்த
மங்கையர்சேலைஇதுயென் தந்தையரே

சின்ன அர்ச்சுனன் வசனம்

கேளுந் தந்தையே நீர் நந்தவனத்தை அழித்ததாக துரியோதிரன் என்னை அழைத்துவரும்படி தூது அனுப்பினூர் துரியன் தம்பிமார் தேவிமார் தொண்ணூற்றென்பது பேர்களும் நந்த

வனத்தில் தருமர்முதல் பாஞ்சாலியை துயிலுரிந்து வனம் ஓட்டி விட்டதாக இழிவாக பாட்டுகள் பாடி கும்மி அடித்தார்கள் பாட்டைகேட்டு எனக்கு கோபம் பிரவேசித்து தொண்ணூற்றொன்பது பேர்கள் சேலையை உரிந்து அவமானஞ் செய்துவிட்டேன் அந்த பெண்களெல்லோரும் நிர்வாணமாக ஓடிவிட்டார் துர்ச்சாதனன் சமருக்கு வந்தான் அவனையும் நாகபாணத்தால் கட்டி தொட்டவர் ஒட்டிக்கொள்ளும்படியாய் சாபந்தந்து அனுப்பிவிட்டேன் நமது பந்துக்கள் தொட்டால் விட்டுவிடும்படி சொன்னேன் அந்த தொண்ணூற்றொன்பதுபேர் சேலையாகும் நீர் சீக்கிரஞ்சென்று துரியனை பாகங்கேட்டுவாரும் தந்தையரே.

புலேந்திரன் தரு

அஸ்தினபுரிதன்னைநாடி அரவக்கொடியோனை அன்புடன்தேடி
விட்டாரேபுரவிசவாரி வெகுபலசேனைகள்வந்திடமீறி
தவண்டமல்லாரிபூரியாட தளபதிமந்திரிகள் அருகினில்நாட
பம்பைமுரசுடங்காபேரி பலபலவாத்தியம்வேணதுத்தாரி
ரதமதைதுருசாகஓட்டும் நாடியேயெல்லையில்சண்டாவைநாட்டும்
வந்தோமேபட்டணம்தேடி வணங்காமுடிமன்னன்சபைதனைநாடி

திரியோதிரன் கவி

எந்தஊர்எந்ததேசம் எங்கிருந்திங்குவந்தாய்
உந்தன்பேர்தாயார்பேரும் உரைத்திடும்தந்தைபேரை.

புலேந்திரன் கவி

எந்தன்தாய்பேரோஅல்லி இருப்பதுமரையாகும்
சுந்திரவிசையன் சுதன்புலேந்திரனேஐயா.

திரியோதிரன் தரு

பகையாளிபிள்ளையல்லவா பட்டணம்வந்திட சட்டமானசபை
பார்க்கவந்ததென்ன சொல்லடா
நகைமொழிதுரோபதையும் ராசாக்கள்ஐவரையும்
சுகப்படவுமில்லாமல் துரத்தினேன்வனவாசம்
சுருள் துஷ்டனேஇங்குநீ வந்ததைசொல்லும்
கஷ்டமில்லாமலே எடுத்துநீவிள்ளும் பகை

புலேந்திரன் தரு

பதிமூன்றும்தான்கழித்துதே உபலாவியம்வந்திட
நீயும்தெரிந்திட பாகம்கேட்கவந்தேநின்றுமே
சதிமோசம்சர்ப்பனைகள் தன்னையெல்லாம்விடுத்து
பதியில்அஸ்தினபுரி பாகம்தன்னைக்கொடுத்து
சுருள் பத்தியாஐவரும் சித்தமாநீரும்
ஒத்துமைபாரும் உன்புத்தியைக்கூறும் பதி

திரியோதிரன் தரு சண்டை

சின்னம்சிறுபையலே என்னிடம்
தீரமற்றுநீ வந்தாயடா
மன்னவன் துரியன் யெந்தனை
மதிப்பில்லாமல்வந்து குதிக்குறாய்நீ
என்னை இவன் பாகமேகேட்டிட
இருவிழிதனில் பொறிபறந்திடவே
முன்னேநில்லாதேநீ நடவடா
மீசைகளிருபுறம் படபடவென

சுருள் மின்னலிடிபோலபாணம் உன்எதிர்விடுத்தேன்பாராய்
தன்னிகரில்லாகணை உன்னையுமேகொல்லுதுபார் சி

புலேந்திரன் தரு

வாடா அடாமதிகுலத்துரியனே வாளியால்எதிர்போர்புரிந்திடவே
போடாஉன்வீரமறிகுவேன் பொடிபடமுடியதுசிதறிடவே

யீடோநீ எந்தனைசெயித்திட
யிடிபோல்கணையது பொடிபடவே
சாடினேன்பம்பரம் போலவே
சகலசேனைகளும் முறிந்திடவே

சுருள் சக்கைசக்கையாகிடவே மிக்கவேகுருதியோட
பக்குவமாய்பாணம்விட்டேன் உக்கிரமுடனேஎழுந்து வா

துரியோதிரன் தரு

அண்டங்களும் கிடுகிடுவென்றிட
அதட்டிப்பல்லைக்கடித்தேன் நெறநெறவென்றுமே
துண்டாஉன்சேனைகள் தனையெல்லாம்
துடித்துவிழவேபாணம் எடுத்தேன்வெல்லவும்
கொண்டேன்தன் உதிரமேவெள்ளம்
குமுகுமுவென கொக்கரிக்க
சண்டனும்உயிர்தனை தேடியே
தாக்கிடுவேன் இதோ போக்கிடுவேன்

சுருள் தத்திதலையுருள யுத்தகளம்தனிலே
கத்திகாளிகூளிகள் சித்தம்களித்திடவே அண்

புலேந்திரன் தரு

கற்றதோர்வித்தைகளெல்லாம் காட்டாதேவீரம்பூட்டுவேன்வில்லை
சத்தசாகரங்களும்நடுங்கிட சாடுவேன்படைஓடிடவே
மெத்தஎன்வலுவறியாமலே வெரியனேதுரியனேநீமடிவாய்
புத்திஉனக்கில்லையோமடையனேபூதம்நாய்நரிஉனைக்கவர்ந்திடவே

சு போடாபடைகள்தன்னை யேடாகூடமாய்கொல்வேன்
தாடாண்மைபேசாதடாகோடாகோடிபாணம்விட்டேன் க

துரியோதிரன் கந்தார்த்தம்

மட்டியேபுலேந்திராநீயும் மல்லுகள்புரியவந்தாய்
கெட்டியாய்ஒருவார்த்தை கெதிகெட்டபாண்டவர்க்கு
சட்டமாய்பாகமேது சமர்த்துண்டால்பார்த்துக்கொள்ளும்
குட்டிசிங்கம்போல்பாய்ந்து,

தரு

கொல்லுவேன்பாராய் உந்தனையிப்போ
வெல்லுவேன்தீராய்
நல்லதுஐவர்க்கு நாடேதுஊரேது
அல்லல்படவும்போராய் சொல்லாமல்நடவடா கொ

புலேந்திரன் கந்தார்த்தம்

சரிசரிமெய்தான்யிப்போ சண்டாளதுரோகிபாவி
பரிகரிரதமும்சேனை பாரடா உன்னைக்கொன்று
துரியனேஎன்தந்தைஐவர் துரைராசர்ஆளாவிட்டால்
நரபதிவிஜயன்மைந்தன்,

தரு

நானேபுலந்திரனல்லடா அல்லியாள்பாலன்
தானேஎன்பேரைச்சொல்லடா
வானோர்முனிவர்போற்ற வளைத்துவில்பாணம்பூட்டி
யேனோமுறிந்துஓட யெடுத்துகணைகள்சாட நா

புலேந்திரன் கந்தார்த்தம்

துரியனும்பின்னிட்டோட துரைபதிபுலேந்திரன்தானும்
பிரியமாமைந்தன்தன்னை பின்னையேஅழைத்துக்கொண்டு
உரியதோர்தந்தைமார்க்கு உற்றதோர்சேதிசொல்ல
கரியமால்அவரைக்காண,

தரு

கடிகிளழுந்துநடந்தான் புலேந்திரராசன்
சடிதியில்போகத்துணிந்தான்
முடிகியேரதமதை அடவிதனையேதாண்டி
நொடியில்உபலாவியம் திடமதாய்வந்துசேர்ந்தான்
சுருள் நோக்கிடவேதந்தை பார்த்திடவேஎதிர்
சீக்கிரமாகவே செல்வனும்வந்தேன் கடி

பொது வசனம்

இவ்விதமாக துரியனை பாகம்கேட்க கொடுக்கமாட்டே னென்று சொல்ல சமர்புரிந்து சபதமிட்டு திரும்பி உபலாவியம் வந்து தந்தை மார்களை பார்த்து சொல்வது.

புலந்திரன் தரு

தருமசிந்தையுடைய பிரியமானதந்தையாரே
தாளிணைக்கேவந்தனம் தந்தையாரே

தருமர் தரு

வந்தனம்புரிந்தபாலா எந்தநாளும்வாழ்குவாய்
அந்தயிடம்போனசேதி அறிவிப்பாயே

புலேந்திரன் தரு

அறிவிப்பேன்உந்தனுக்கு அந்தகன்மைந்தனவன்
அரசதுகொடுக்கே னென்றான்தந்தையாரே

தருமர் தரு

அரிபரந்தாமனே அகிலமளந்தவரே
அரவக்கொடியோன்பாகம் தருகனென்றானும்

கிருஷ்ணன் தரு

இந்திரனேநீயும் யேகித்துரியனிடம்
இராச்சியம்கேட்டதினால் என்னசொன்னான்

புலேந்திரன் தரு

பங்குபாகங்களேது பதின்மூன்றுசென்றவர்க்கு
பாத்தியமில்லையென் றான்பரந்தாமா

கிருஷ்ணன் தரு

கீர்த்திமிகுந்ததர்மா பூர்த்தியாநாளையதினம்
கேட்டுநாள்வைத்துவாரேன் மைத்துனரே

சின்ன அர்ச்சுனன் தரு

தந்தைக்குதந்தையான தயாபரதந்தையாரே
தனையன்வந்தனம்செய்தேன் தாதைமாரே

தருமர் தரு

புந்திமகிழவாழ்வாய் ஒருசிந்தனையில்லாமல்
புலேந்திரசெல்வனாரே என்மகனே

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE 104031

புலேந்திரன் வசனம்

கேளும் தந்தையே தூர்ச்சடையின் குமாரத்தி கலந்தாரி என்மனைவி அவள் புத்திரன் உனக்குபேரன் தூர்ச்சாதனனை பாணத்தினால் கட்டினவன் துரியோதனனை தம்பி 99-பேர் மனைவிகளை துயிலுரிந்தவன் சந்திரகுலம்விளங்கவந்தவன் என்குமாரன் தந்தையே.

தருமர் வசனம்

அப்படியா ஆனால் வாருமப்பா என் பவுத்திரனே என்று இருகரத்தாலும் வாரி முத்தமிட்டு எதிர் நிற்கும் கிருஷ்ணபகவானை வந்தனம்செய்யும்படி சொல்ல சின்ன அர்ச்சுனன் அவ்வாறே தோத்தரிக்க பகவான்மகிழ்ந்து ஆசீர்வதித்து புலேந்திரனை அழைத்து உன் குமாரனும் நீயும் மதுராபுரிபோய்ச் சேருங்கோளென்று விடைகொடுத்துவிட்டு தருமநந்தனரைப் பார்த்து ஒகோ மைத்துனா நேற்றையதினம் உலூகமுனிவர் அத்திபுரம் தூதுபோனதில் துரியோதனன் வைது அவரை அனுப்பி விட்டான் இன்றையதினம் புலேந்திரன் தூது சென்றதில் பின்னிட்டு அமர்செய்து ராச்சியம்பெற்று போகும்படி சொன்னதினால் நாளையதினம் நான் தூது சென்று வருகிறேன் நமக்கு சேரவேண்டிய பாகத்தை கொடுத்தால் பெற்றுக்கொள்ளுவோம் கொடாமல்போனால் சண்டைக்கு முகூர்த்த நாள் வைத்துவருகிறேன் மைத்துனா.

வாழி விருத்தம்

வண்மையாய்ஸ்ரீமுகவாண்டு வளர்கார்த்திபன்னிரண்டில்
பின்னமில்லாசோமவாரம் பிரதானஉத்திராடநக்ஷத்திரத்தில்
உண்மையாய்க்கருத்திலெண்ணி ஊக்கமாய்கதையைத்துவக்கி
பண்ணினோம்பவஆண்டுதன்னில் பகர்வைகாசிஇருபத்திரண்டில்
நண்ணயசோமவாரம் நக்ஷத்திரம்சதையம்தன்னில்
முன்னவர்சித்தியோகம் முடிந்தவிச்சரிதையாகும்
கன்னியமாய்பாடினோரும் கதைதனைநடித்தபேரும்
சென்னையில்அச்சிட்டபேரும் ஜெகமதில்வாழிதாமே.

சின்ன அர்ச்சுனன் சண்டை நாடகம்

முற்றிற்று.

ஸ்ரீ மகள் விலாசம் பிரஸ், ஜி. டி. சென்னை.
Q. H. M. S. 339. காபி 1000. 22-6-46

கிடைக்குமிடம் :—
அகரப்பேடு. இரங்கசாமி முதலியார் த்விதிய குமாரர்.
அ. இராஜரத்தின முதலியார்
மலர்மகள் விலாசம் பிரஸ்,
23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.